24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 | கதிர் 143 | சித்திரை 07ஆம் நாள் | சனிக்கிழமை | 20 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050



## அரசியல் பயணத்தில் இந்த ஆண்டு அதிரடி

*சங்கா முன்னிலையில் சஜித் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 20

இந்த ஆண்டில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்துவதே எனது எதிர்பார்ப்பாக இருக்கின் 19

## அரசியலுக்கு வரமாட்டேன்

*சங்கா தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 20

சஜித் பிரேமதாசவுடன் பொது நிகழ்வில் சங்ககாரா பங்கேற்றிருந்தபோதும், அரசியலுக்குள் 19

## சஜித்துடன் முரண்பாடு எதுவும் இல்லையாம்

கொழும்பு, ஏப். 20

அமைச்சர் சஜித் பிரேமதாசவுடன் எனக்கு எந்த முரண்பாடும் கிடையாது. தொடர்ந்து 06

## ஐ.தே.கவை உடைக்கும் சதி முயற்சி பலிக்காது!

*எமது குடும்பச் சண்டைக்குள் மூக்கை நுழைப்பதா? - ரணில்*

கொழும்பு, ஏப். 20

ஐக்கிய தேசியக் கட்சி ஒரு பலமான கட்சி. இதில் உள்ளவர்கள் அனைவரும் குடும்பத் 19

## இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிய

# அன்னை பூபதியின் நினைவுநாள் தமிழர் தாயகத்தில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20

அமைதிப்படையாக நுழைந்து, அட்டூழியம்-அராஜகம் - படுகொலை புரிந்து தமிழின அழிப்பில் ஈடுபட்ட இந்திய இராணுவத்துக்கு எதிராக - இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிராகத் துணிந்து அகிம்சை வழியில் - காந்தீய வழியில் போராடி உயிர்துறந்த அன்னை பூபதியின் 31ஆவது நினைவு நாள் வடகிழக்கு தமிழர் தாயக தேசத்திலும், தமிழர்கள் பரந்து வாழும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

(விரிவான செய்தி - பக். 10)




# நிறைவேற்று அதிகார ஒழிப்பு இப்போதைக்குச் சாத்தியமில்லை

## ‘பல்டி’ அடிக்கிறது ஐ.தே.க.

**கொழும்பு, ஏப்ரல் 20**

**நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிப்பது இப்போதைக்குச் சாத்தியமில்லை என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி 2020ஆம் ஆண்டு தெரிவாகும் அரச தலைவரும் நிறைவேற்று அதிகாரம் உடையவராக இருப்பார் என்று குறிப்பிட்டுள்ளது.** 06





*இந்திர விழா கொண்டாட்டத்தால் வல்வை நகரம் நேற்று விழாக் கோலம் பூண்டிருந்தது. இந்துக் கடவுள்களின் பிரமாண்ட கட்டவுட்கள் வைக்கப்பட்டிருந்தன. வல்வை நகரம் முழுவதும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. புகைக்கூண்டுகள் வானில் பறக்கவிடப்பட்டன. வானவேடிக்கைகளும் இடம்பெற்றன. பல ஆயிரக் கணக்கான மக்கள் இவற்றைப் பார்வையிட திரண்டிருந்தனர். (ஓ,5,26)*

## வல்வையில் காயங்களுடன் 7 பேர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஏப். 20

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இரண்டு தரப்பினருக்கு இடையேயான மோதலில் காயமடைந்த 8 பேர் ஊறணி மற்றும் 19

## மாற்றுத் தலைமைக்குத் தகுதியற்றவரே முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன்

*இப்படிச் சொல்கிறார் வரதராஜப்பெருமாள்*

யாழ்ப்பாணம், ஏப். 20

வடக்கு மாகாண சபை ஊடாக எதையும் செய்யாது கற்பனை உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் வடக்கு மாகாண 19

## சாவகச்சேரியில்

## எதை எடுத்தாலும் 10 ரூபா! சிற்றுண்டிச்சாலை திறப்பு

(விரிவான செய்தி - பக். 12)

## மழை பெய்கின்றபோதும் வாட்டி வதைக்கிறது வறட்சி

*வடக்கில் பாதிப்பு*
*ஒரு லட்சத்தை தாண்டியது*

யாழ்ப்பாணம், ஏப். 20

வடக்கு மாகாணத்தில் பரவலாக ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பெய்கின்ற 06

# வடக்கில் தொடரும் மின்னல் தாக்கம்

## முல்லையில் ஒருவர் நேற்று உயிரிழப்பு யாழ்ப்பாணத்தில் தீப்பற்றியது தென்னை

*4 நாள்களில் 5 சம்பவங்கள் கடும் காற்றாலும் பாதிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 20

வடக்கில் கடந்த நான்கு நாள்களாக மாலைவேளையில் இடி மின்னலுடன் மழை பொழிகின்றது. மின்னல் தாக்கம் காரணமாக யாழ்ப்பாணம் குப்பிளானில் கடந்த செவ்வாய்க்கிழமை 3பேர் உயிரிழந்திருந்த நிலையில், முல்லைத்தீவில் மின்னல் தாக்கம் கார 06



## நாளை வரை மழை தொடரும்

கொழும்பு, ஏப். 20

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை நாளை வரையில் தொடரும் 06

## நாட்டை தொடர்ந்தும் உலுக்கும் விபத்துக்கள்

*முல்லைத்தீவு, கண்டியில் நேற்று 5 பேர் காயம்*

யாழ்ப்பாணம், ஏப். 20

நாட்டில் விபத்துக்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. கடந்த ஒரு வாரத்தில் 06

## யா/யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை
## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியர்
**திருமதி சிவபுரத்தரசி கிரிதரன்**
அவர்களின் தாயார்
**திருமதி**
**வேலம்மா இரத்தினகோபால்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.**

(9966 NJ)
(4.17)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 . 03 . 1944



மறைவு 20 . 04 . 2011

அமரர்
### தியாகராசா ஆன் ப்ரான்சிஸ்க்கா புஸ்பரத்தினம்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே - நீங்கள் இல்லா
எமதில்லம் ஒளியிழந்து போனதம்மா
தனக்காய் வாழாமல் எமக்காய் வாழ
தன்னையே அர்ப்பணித்த பாசமிகு அம்மாவே
நினைத்ததெல்லாம் பெற்றுத் தந்து எம்மோடு
மகிழ்வாய் வாழ்ந்த அன்புத் தெய்வமே
எமைத் தவிக்க விட்டு இறைவன் பாதம் சென்றதேனோ
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் எமக்கு அம்மாவாக
வரவேண்டும் என்று இறைவனிடம் வேண்டி
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**47, பென்றிக் கோஸ்ரல் லேன்.**
**யாழ்ப்பாணம்.**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்
### சபாநாயகம் தேவானந்தன்
**(பொறியியலாளர் வணிக முகாமையாளர் - Sahid Sendiriyan Berhad, Brunei)**



பிறப்பு 02.06.1958 இறப்பு 13.04.2019

யாழ். கரவெட்டி மத்தி சாமியன் அரசடியைப் பிறப்பிடமாகவும், கனடா, Brunei ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சபாநாயகம் தேவானந்தன் 13.04.2019 சனிக்கிழமை Brunei இல் காலமானார்.

அன்னார், சபாநாயகம் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கந்தசாமி தேவசேனா தம்பதிகளின் அன்பு மருமகனும், குமுதினி அவர்களின் ஆருயிர்க் கணவரும், கோசலையின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற யோகானந்தன் மற்றும் கமலினி (கனடா), நந்தினி (கனடா), குகானந்தன், மாதினி, காலஞ்சென்ற சதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரராஜன்(கனடா), சகுந்தலா (கனடா), காலஞ்சென்ற மகாதேவன், கலாதேவி, அமிர்தலிங்கம், சியாமளா(இங்கிலாந்து), சிவசிதம்பரம் (சிங்கப்பூர்), குருபரன் (இங்கிலாந்து), இளவேந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் (2B Elvitigala Mawatha, Colombo - 8) நண்பகல் 12 மணிக்கு அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக கனத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோவர்த்தனம்,**
**கரவெட்டி மத்தி, கரவெட்டி.**
(NE/604) (PL17)
**தகவல்: குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
### அமரர் கந்தையா இளையதம்பி (தணிகாசலம்)
(ஓய்வுநிலை இ.போ.ச.நடத்துநர்)



மலர்வு 10.03.1940 உதிர்வு 30.04.2018
திதி:- 20.04.2019

அன்புத் தந்தையே!
ஓராண்டு ஆனதப்பா!!!
பாசத்தின் பிறப்பிடமே, அன்பையும்
அரவணைப்பையும் தந்தவரே
காலங்கள் கடந்து சென்றாலும்
இதயத்தின் துடிப்பைப் போல
உணருகின்றோம்
இக்கணமும் உங்கள்
நினைவால் துயருருகின்றோம்
**உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

**குடும்பத்தினர்.**
GPS. **றோட், கல்வியங்காடு.**
**சோதி வேம்படிலேன்,**
**மானிப்பாய்.**

(CS/20815)(11.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 . 02 . 1956



மறைவு 30 . 04 . 2018

### அமரர் துரையப்பா குமாரதாஸன்
திதி: பிரதமை

குடும்பத்தின் தலைவனாய் குன்றா மணிவிளக்காய்
நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையுமாய்
வாழ்ந்திருந்த குமரப்பா கொடுங்காலம் வந்ததுவோ
கொண்டும்மை சென்றதுவோ ஆறாது உம் பிரிவு
தேறாது எம் மனது மீண்டும் நாம் மகிழ
மீளாதோ உம்வாழ்வு ஏங்கித் தவிக்கின்றோம்
எங்குற்றாய் ஐயா

**ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்**
**குடும்பத்தினர்.**

## தில்லாலங்கடி வேலை...

நான், அருண், கோகுல் மூவரும், நெருங்கிய நண்பர்கள். எங்குச் சென்றாலும், ஒன்றாக செல்வோம்.

ஒருமுறை, உணவு இடைவேளையில், பொருளியல் ஆசிரியர், என்னை அழைத்தார். 'கை கடிகாரம் பழுதாகி விட்டது; உனக்கு தெரிந்த கடை இருந்தால் சரி செய்து வா...' என்று, 50 ரூபாய் கொடுத்தார்.

அவர், வெளியூர் என்பதால், உள்ளூரில், கடைகள் எங்கு இருக்கிறது என்பது அவருக்குத் தெரியாது. நண்பர்களுடன் கடைக்குச் சென்றேன்.

ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை நடந்தே சென்றோம். அருண், கை கடிகாரத்தை நோண்டிய படியே வந்தான். திடீரென, வேலை செய்ய ஆரம்பித்தது; எங்களுக்கு, ஆச்சரியம். கோகுல், ஒரு யோசனைக் கூறினான்...

'சார் கொடுத்த பணத்துல, 30 ரூபாய்க்கு ஏதாவது வாங்கி சாப்பிட்டு, பழுது பார்த்ததுக்கு, 30 ரூபாய் ஆச்சுன்னு சொல்லிடலாம்...' என்றான்.


அதன்படியே, 30 ரூபாய்க்கு, பழம், பிஸ்கட் வாங்கி தின்று, பள்ளிக்குச் சென்றோம்.

ஆசிரியரிடம் கை கடிகாரத்தை கொடுக்கும் போது நின்று விட்டது. எனக்கு, கை, கால் உதறி, வியர்த்தது.

'மீண்டும் கடைக்காரரிடமே எடுத்துச் சென்று தருகிறோம்...' என்று அருண் சமாளிக்க, திரும்பவும் கடைக்கு சென்றோம்.

நாங்கள் செய்த குற்றத்துக் காக, ஒவ்வொருவர், வீட்டிலிருந்தும், 14 ரூபாய் எடுத்து வந்து, பழுது பார்த்து கொடுத்தோம்.

அன்றிலிருந்து, இன்று வரை தில்லாலங்கடி வேலைகள் எதுவும் செய்வதில்லை



## மரண அறிவித்தல்
### வேலுப்பிள்ளை கணேசமூர்த்தி



வன்னியப்பிள்ளையார் , கோயிலடி, வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணேசமூர்த்தி 17.04.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் மாணிக்கம் ஜானகி தம்பதிகளின் மருமகனும் செல்லம்மாவின் (மல்லிகா) அன்புக் கணவரும் நிர்மலதாசன் (சுவிஸ்), நிர்மலா(ஜேர்மனி), பிரபா (ஆசிரியர் - கிளி/இரணைதீவு றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுலோஜினி (சுவிஸ்), சுரேந்திரன் (ஜேர்மனி), அருளானந்தகுமார் (ஆசிரியர் - கிளி/முழங்காவில் ம.வி) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலாஜினி (சுவிஸ்), பிருந்தா (ஜேர்மனி), சஜீந்திரன் (ஜேர்மனி), இலக்கியா (ஜேர்மனி), ஸியாம்சரண், ஸியாம்பவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, இராசமணி மற்றும் திருநடராசா (ஓய்வு பெற்ற பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்), திருஞானம்(வண்ணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் எள்ளங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(K 601)(14,17)
**தகவல்: குடும்பத்தினர்.**

**021 226 4088**

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி சரசுவதி தம்பிப்பிள்ளை

(காரைநகர்)

மூத்த காந்தீய வாதியும் பாராளுமன்ற சமகால மொழிபெயர்ப்பாளருமான சோ.க.தம்பிப்பிள்ளையின் பாரியார் திருமதி சரசுவதி தம்பிப்பிள்ளை அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு பெரியம்மாவின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ந.உதயகுமாரன் (கண்ணன்)

**சிங்கப்பூர் ஜுவல்லறி**
**28, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்



மண்ணில் 25 . 06 . 1931

விண்ணில் 17 . 04 . 2019

## திருமதி சரசுவதி தம்பிப்பிள்ளை

காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கிராஞ்சி, பிருந்தாவனத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கொழும்பு, பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர் மடத்தின் (Holy Family Convent) ஓய்வுநிலை ஆசிரியரும், வானொலியில் பல்வேறு சிறுவர் நிகழ்ச்சிகளை வழங்கியவரும், காந்திய சமூகத் தொண்டருமான திருமதி. சரசுவதி தம்பிப்பிள்ளை கடந்த (17.04.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வுநிலைப் பாராளுமன்ற தமிழ் - சிங்கள சமகால பேச்சு மொழி பெயர்ப்பாளரும், காந்தியவாதியுமான சோ. க. தம்பிப்பிள்ளையின் ஆருயிர் மனைவியும் கவிஞர் த. நந்திவர்மன் (சிட்னி), ஈழவர்மன் (சிட்னி), சோமவர்மன் (சிட்னி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபாசினி, பரமேசுவரி, பவானி ஆகியோரின் அன்பு மாமியாரும், வைகுந்தன், வைதேகி, விக்னேஷ், விமலேஷ், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கொழும்பு, கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் (Mahinda Parlour) நடைபெறும். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மயானத்திற்கு 10.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**1/2, 47 ஆவது ஒழுங்கை,**
**வெள்ளவத்தை,**
**கொழும்பு - 6**

**தகவல்**
**சோ. க. தம்பிப்பிள்ளை - 011 236 3579**
**கவிஞர் த. நந்திவர்மன் - +61 434 314 240**
**த. ஈழவர்மன் - 076 681 8575**
**த. சோமவர்மன் - 077 276 5115**

(CS 24692)
(14,17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவநேசரத்தினம் குணரத்தினம் (ரதி)

**இளைப்பாறிய பிரதி அதிபர் (கொக்குவில் இந்துக் கல்லூரி), முன்னாள் ஆசிரியர் யா/இந்து மகளிர் கல்லூரி, அனு /விவேகானந்தா கல்லூரி**



யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கொக்குவில் மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சிவநேசரத்தினம் ஆ.சி.குணரட்ணம் 16.04.2019 செவ்வாய்க்கிழமை நள்ளிரவு கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாத சுந்தரம் - இரத்தினம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசம்பு குணரட்ணத்தின் (விளையாட்டுத்துறை உதவிப்பணிப்பாளர்) அன்பு மனைவியும் பார்த்தீபன் (பொறியியலாளர்), பிரதீபன் (பொறியியலாளர்), சுகந்தீபன் (முன்னாள் மருத்துவபீட மாணவன்), தர்சிகா (முன்னாள் உதவி முகாமையாளர் - மக்கள்வங்கி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் துஷ்யந்தி, யசீலா (ஆசிரியர்), தயாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பேராசிரியர் மகேஸ்வரன் (இரசாயனத்துறை - யாழ் பல்கலைக்கழகம்), ஞானேஸ்வரன் (பொறியியலாளர்), சுதந்திரேஸ்வரன் (தொழில்நுட்ப உதவியாளர்), இராஜேஸ்வரன் (பொறியியலாளர் - பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) மற்றும் திருமதி.சிவநேசராணி பத்மநேசன் (ஓய்வு நிலை ஆசிரியர்- யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), திருமதி சிவநேசமலர் ஜெயபாலன் (ஓய்வு நிலை உப அதிபர் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), திருமதி சிவநேசஜோதி சிவானந்தராஜா (பொறியியலாளர் - நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி (ஓய்வு நிலை பேராசிரியர் இரசாயனத்துறை), ருக்குமணிதேவி (நியூசிலாந்து), காலஞ்சென்ற இரஞ்சினி (தொழில்நுட்ப உதவியாளர்) மற்றும் பத்மநேசன் (ஓய்வுநிலை முகாமையாளர் - இலங்கை வங்கி), சிவாஜினி, ஜெயபாலன் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/இந்துக்கல்லூரி), சிவானந்தராசா (பொறியியலாளர் - நியூசிலாந்து), காலஞ்சென்றவர்களான நயினாதீவு நடராஜா, பாக்கியலஷ்மி, பரமசாமி, பத்மநாதன், மற்றும் பழனிவேல், சோதீஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் கேதாரன், அபிராம், சிவகன்.வாதாபன், கேசிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் (குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு) காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**குளங்கரை ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு.**

(CS 24692)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0718561334**



## தியாகராசா கனகசபாபதி

**(இ.போ.ச.ஓய்வுபெற்ற லிகிதர்)**

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகர்ாசா கனகசபாபதி (இ.போ.ச.ஓய்வுபெற்ற லிகிதர்) 17.04.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா - மங்கையற்கரசி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,லலிதாதேவியின் அன்புக் கணவரும், முரளிதரன் (கணக்காளர் - மாலைதீவு), அமித்தா (ஆசிரியை- கொழும்பு சைவமங்கையர் வித்தியாலயம்), அனுஷ்யா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிவேதா, சசிகரன் (IDA உதவிப் பணிப்பாளர்), முரளிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், பிள்ளையம்மா, கனகம்மா, நல்லநாதன், பாலசுந்தரம் மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, நல்லையா, மயில்வாகனம், பத்மநாதன், சோமசுந்தரம் மற்றும் Dr.ஜெயலிங்கம், ஶ்ரீகாந்தா, பத்மினிதேவி, சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான புஷ்பராணி, மகேஸ்வரி, கணேசலிங்கம் மற்றும் ஞானேஸ்வரி ஆகியோரின் சகலரும், அபர்ணிகா, தரணிகா, வைஷ்ணவி, அபிநாத், அக்ஷயன், அகரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**130, லவ்லேன்,**
**உடுவில்.**

(CS/24814)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 599 2866**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
17 . 09 . 1946

விண்ணில்
22 . 03 . 2019


## அமரர் கந்தையா செல்வராசா

பெரு விருட்சமாய் நாமெல்லாம்
கிளைகள் பல பரப்பி விரிந்திருக்க
ஆணிவேராய் நீங்கள் இருந்து
அல்லும் பகலும் அயராது உழைத்து
உங்களையே அர்ப்பணித்து
எமக்காக வாழ்ந்த எங்கள் தெய்வமே..
உங்கள் எண்ணங்கள் நிறைவேற
நீங்கள் காட்டிய வழிநின்று
அன்பும் பண்பும் ஆற்றலும் மிகுந்தவராய்
இவ்வுலகில் நாம் வாழ்ந்திட
எம்முடனேயே துணை நின்று
வழிகாட்ட வேண்டுகின்றோம்!

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்"

குடும்பத்தினர்.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15 . 08 . 1942

மறைவு
15 . 04 . 2014

## அமரர் சின்னப்பு சுப்பிரமணியம்

திதி : பிரதமை 20.04.2019, சனிக்கிழமை

அன்புடனே எமை வளர்த்து அறிவூட்டி
பண்புடன் நாம் வாழ வழிகாட்டி
இன்பமுடன் வாழ்வதற்கு எல்லாம் எமக்களித்து
இறைவனடி சேர்ந்தனையோ! ஆண்டு
ஐந்தல்ல என்றும் நாம் மறவோம்

"நெஞ்சிலிருக்கும் வரை நினைவிருக்கும்"

இன்று சனிக்கிழமை (20.04.2019) எமது இல்லத்தில் நடைபெறும் ஐந்தாம் ஆண்டு பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீவிக்கினேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (ACO 325/15/17)

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி சி.கிரிதரன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி வேலம்மா இரத்தினகோபால்**
அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயருறும் - தரம் 5 F மாணவர்கள்
யா/ யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை

(CS/24809)(11.17)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# நினைவஞ்சலி

1ஆம் ஆண்டு 22ஆம் ஆண்டு



**கிருஷ்ணசாமி மங்களம்மா**
தோற்றம் – 10.10.1926
மறைவு – 30.04.2018

**தாமோதரம்பிள்ளை கிருஷ்ணசாமி**
தோற்றம் – 19.06.1920
மறைவு – 18.12.1997

வளைந்தோடும் வாழ்வின்
நெகிழ்ந்தோடும் பயணந் தோறும்
அன்பு பண்பு பாசம் என்ற
முக்குணங்களிலும் சிறந்து வாழ்ந்து
அர்த்தமற்ற வாழ்வை அர்த்தமுள்ளதாகவும்
அற்புதமாகவும் மாற்றிய
அணைந்தும் அணையாத சோதிகளே !


பூநாறி மரத்தடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சிவசிதம்பரம் கோபாலபிள்ளை (சிவா கோபால்)

*(Cambridge London - Masters In Geology, and Geodetic. Ph.D in Geodetic and Masters in Statistics at Ohio State University USA. Worked at Battele Memorial Institute as Principal Scientist, and Senior Statistician. Worked at Boeing SALC as Principal Information Engineer. He also worked at Resource International. He was a Professor at Devry Institute and at Oterbein University. He obtained life master certificate for game of Bridge)*



யாழ். வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஐக்கிய அமெரிக்கா Columbus Ohio ஐ வதிவிடமாகவும் கொண்ட சிவசிதம்பரம் கோபாலபிள்ளை கடந்த (17.04.2019) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், சிவானி கோபால் எட்வேட், பிரசாந் கோபால் ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்றகுலசேகரம்பிள்ளை, இராமலிங்கம் (செட்டியார் - கனடா), மோகனச் சந்திரன் (Seattle - ஐக்கிய அமெரிக்கா), யோகேஸ்வரி (ஐக்கியஅமெரிக்கா), இராஜேஸ்வரி (இலங்கை), காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ஞானேஸ்வரி மற்றும் யோகாம்பிகை (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், லக்சுமி(கனடா), கமலா(இலங்கை), சீதேவி(கனடா), சண்முகராஜா(ஐக்கிய அமெரிக்கா), மகாலிங்கம் (கிளிநொச்சி), ஜெயராஜா (அத்தியடி), காலஞ்சென்ற சிவகுமாரி (சிவானி) DDS, இரட்ணராஜா (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோபியா அவர்களின் அன்புப் பேரனும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராசேஸ்வரி மகாலிங்கம் குடும்பம் : 077 072 9548
குலசேகரம்பிள்ளை ரூபன் குடும்பம் : 077 334 4526
நடராசா ஜெயராசா குடும்பம் : 077 9599 527

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 19.04.2019 | 2500 | நீலம் |

தனுசு

வெற்றி இலக்கங்கள்: 13 24 34 46

ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,249,298/=

21.04.2019 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 585

வர்ணம் : செம்மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2019.04.19

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,713,625/-

வெற்றி இலக்கங்கள்: 14 17 29 42

ஆங்கில எழுத்து: Z

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>AKoti டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 957

சீட்டிழுப்பு திகதி 2019.04.18 வியாழக்கிழமை

A 22 23 64 72

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,636,304/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

டிக்கட் விற்பனையாளர்கள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி விதானையார் வீதியில் 1¼ பரப்பு காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

**077 614 6434**

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 763

சீட்டிழுப்பு திகதி 19.04.2019

வெற்றி இலக்கங்கள்: 02 18 46 52

ஆங்கில எழுத்து: L

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 24, 941, 548/=

தொலைபேசி : 0112 333 546 - 47 web : www.dlb.lk

உடனடி : 011 4 062 002, 077 105 4494 அல்லது 1919

## Motor Grader and Roller Operator
## உடனடி தேவை

வவுனியாவில் இயங்கிவரும் கட்டுமான கம்பனி ஒன்றுக்கு அனுபவம் உள்ள (மோட்டர்கிரேடர்) Motor Grader MG330 மற்றும் 8 Ton Roller ஆகியவற்றுக்கு Operator உடனடி தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்,

**தொடர்பு - 076 248 0319, 024 222 4621**

## உயிரியல் (Biology)

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் ஆங்கில மற்றும் தமிழ் மொழி மூலத்தில் தனி அல்லது குழு வகுப்புகளாகக் கற்பிக்கப்படும்.

**076 869 1176/077 669 3028**

## தேவை

போட்டோக்கொப்பி/ புத்தகக்கடை வேலை தெரிந்த அல்லது பழகவிரும்பும் பெண்பிள்ளை தேவை.

**075 038 4092/077 252 4093**

## வேலைவாய்ப்பு

முச்சக்கரவண்டி திருத்தக்கூடிய (கராச்சுக்கு) சகல வேலையும் அறிந்த முன் அனுபவமுள்ள பாஸ் தேவைப்படுகின்றார்.

செய்யும் வேலைக்குரிய வருமானம் முழுவதும் அவருக்கே உரியது.

**077 4445057/076 3738495**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியு சுண்டுக்குளி பகுதியில் 1 பரப்பு 11 குளியில் அமைந்த 4 அறைகள், இணைந்த குளியல் அறையுடன் வீடு விற்பனைக்குண்டு.

**077 387 0487, 077 264 0525**

## வடக்கின் கடலுணவுத் திருவிழா

**வடக்கில் முதல் தடவையாக கடல் சார் உணவுத் திருவிழா ஒன்றினை மிக விரைவில் நடாத்த வடமாகாண சுற்றுலாப் பணியகம் தீர்மானித்துள்ளது.**

தேசிய ரீதியில் மற்றும் சர்வதேச ரீதியில் சுற்றுலா பயணிகளாலும் மற்றும் பொது மக்களாலும் அதிகம் விரும்பப் படுகின்ற வடபகுதிக்கே உரித்தான கடல் உணவுகளின் தனித்துவத்தினை மேலும் வெளிக்கொணர்வதற்காக, அனைத்து விதமான கடல் உணவுகளையும் ஒரே இடத்தில் சுவைத்து பார்க்கக்கூடிய விதத்தில் இவ் உணவுத் திருவிழா நடாத்தப்படவுள்ளது.

இவ் உணவுத் திருவிழாவில் கடல் உணவுக் காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனையாளராக பங்குபற்ற விரும்புவர்கள் பின்வரும் முகவரியூடாக 25.04.2019ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

- தபால் முகவரி: தலைவர், சுற்றுலாப் பணியகம், வடமாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி.
- மின்னஞ்சல் முகவரி: tourismnorth.srilanka@gmail.com
- தொலைபேசி இலக்கம்: 0778449742, 0753255247, 0212217311

இதில் கடல் உணவுக் காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனையாளர்களாக பங்குபற்றுபவர்கள், தங்களது உற்பத்தியை சந்தைப்படுத்தும் வாய்ப்பை பெற்றுக்கொள்வதுடன் பெறுமதிமிக்க சான்றிதழும் அவர்களுக்கு வழங்கப்படும்.

## SOLAR சிஸ்டம்ஸ்

- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை



E Green Lanka


MICRO PC SYSTEMS

Micro Power Co Systems

WARRANTY 25 YEARS WARRANTY

| 2kW SYSTEM | 3kW SYSTEM | 5kW SYSTEM | 8kW SYSTEM | 12kW SYSTEM | 15kW SYSTEM | 22kW SYSTEM | 33kW SYSTEM | 44kW SYSTEM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 350,000/= | 470,000/= | 750,000/= | 1,080,000/= | 1,480,000/= | 1,695,000/= | 2,200,000/= | 3,300,000/= | 4,400,000/= |
| 240 Units | 360 Units | 600 Units | 950 Units | 1465 Units | 1795 Units | 2640 Units | 3960 Units | 5280 Units |


மின்சார தடை இல்லை
No Power-Cut




விவசாயிகளுக்கான மின்சாரம்




SOLAR STREET GARDEN LIGHTS




7 வருடங்களுக்கான தவணை கட்டண முறை

- 44 kW: CEB இனால் வருமானம் ரூ.116,160 (5280 x 22/-) ரூ.44 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 68,600/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 47,560/-
- 33 kW: CEB இனால் வருமானம் ரூ. 87,120 (3960 x 22/-) ரூ. 33 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 51,450/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 35,670/-
- 22 kW: CEB இனால் வருமானம் ரூ. 58,080 (2640 x 22/-) ரூ. 22 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 34,300/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 23,780/-
- 12 kW: CEB இனால் வருமானம் ரூ. 32,230 (1465 x 22/-) ரூ. 14.8 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 23,067/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 9,163/-

* நிபந்தனைகளுக்குட்பட்டது

KACO Fronius SOLAX ENVERTECH victron energy REC JinKO Solar YINGLI SOLAR ReneSola

LECO Approved

கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062 / 077 3963278

யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284

வவுனியா - 0777 425974 / 0777 763071 / 077 3963273

மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 0356072 / 077 3963281

**TIPS!!!**

*Factors affecting performance of a solar PV system!*

Factors which are under the control of Human efforts:

1. Solar Panels: Figures given in the datasheet by the panel manufacture and its accuracy of Peak power, Module efficiency, temperature co efficient.=> So request for Tier 1 brand
2. Installation: Panel's orientation and tilt, System Design, Grid quality =>Select well-trained / Certified Company for the Installation.
3. Inverter: Efficiency =>so select premium brands.

*Factors which are beyond the control of Human efforts:*

1. Solar irradiance (SI) available at the site
2. Ambient temperature 3. Accumulation of Dirt/Smog
4. wind speed etc.

மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com

No.115C, W.A. Silva Mawatha, Colombo 06. Tel: 011 4000686. | No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.66B, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969 | No.115-5C, New Kalmunai Road, Kalladi, Batticaloa. Tel: 011 5640650

## நாளை...

என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கடும் மழை பெய்வதுடன், இடி, மின்னல் தாக்கமும் அதிகமாக இருக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளது.
நாட்டின் பெரும்பாலான இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்படுகின்றது. சப்ரகமுவ, மத்திய, தென், ஊவா, மேல், வடமத்திய மாகாணங்களிலும் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் கடுமையான மழை பெய்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஒ.5)

## சஜித்துடன்....

அவருடன் ஒருமித்துப் பயணிக்கவே நான் விரும்புகின்றேன் என்று மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் உப தலைவர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளியாகி யுள்ள செய்திகள் தொடர்பில் வினவியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அமைச்சர் சஜித் பிரேமதாசவுடன் எனக்கு எந்த முரண்பாடும் கிடையாது. தொடர்ந்து அவருடன் ஒருமித்து பயணிக்கவே நான் விரும்புகின்றேன். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அவரே என்னுடன் கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தி கொள்கிறார். இந்த விடயத்தால் பிரச்சினைகள் எதுவும் ஏற்படப் போவதில்லை. முரண்பாடுகளை தீர்த்துக் கொண்டு அவருடன் தொடர்ந்து பயணிக்கவே நான் விரும்புகிறேன்- என்றார். (ஒ.5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி நற்குணநாதன்



நவாலி வட்க்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி நற்குணநாதன் கடந்த (18.04.2019) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தெய்வானை தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பவளம் தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற நற்குணநாதனின் அன்பான மனைவியும் சந்திரவதனி, விக்கினேஸ்வரன் (கனடா), காந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜீவரூபன், சோபிதன், கஜலக் ஷி, லக் ஷியா,சங்கரன், கிருஷிகன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சறோஜாதேவி, யமுனாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற பத்மநாதன், பத்மலிங்கம் மற்றும் கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**அட்டகிரி வீதி, நவாலி வடக்கு.**
**மகன் : காந்தன் - 077 4219767**



### திருமதி இராமுப்பிள்ளை மகேஸ்வரி

யாழ். இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை மகேஸ்வரி கடந்த (18.04.2019) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமுப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, வைத்திலிங்கம், சின்னத்துரை, கந்தையா, பொன்னம்பலம், நாகம்மா, நடராசா, பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), ஜெகதீஸ்வரி, கமலாதேவி, இராஜ லஷ்சுமி, சிவானந்தராஜா (பிரான்ஸ்), கயதர்சினி (ஜெர்மனி), சிவர்னந்த பவானி (கனடா), சிவலோகநாதன் (சுரேஷ் - பிரான்ஸ்), சிவஜெகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாஸ்கரன், சிவநேசன், தம்பிஜயா, வேதநாயகமூர்த்தி, சிறீஸ்கந்தரூபி (பிரான்ஸ்), இரத்தினகுமார் (ஜெர்மனி), சதானந்தன் (கனடா), தாமரைச்செல்வி(பிரான்ஸ்), வனஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் சரன்ஜா (அபிராம்), யதுஷன் (கஜானா), யசிந்தன், பிரதீபன், பிரதீபா (விசாகன்), பிரசாந்தி (பாலரூபன்), கஜராம், கஜனா, மனோஜா (அருண கிரி), மனோஜ்குமார், மயூரதன், மதுஜனன், கதீஷன், ஆரபி, ராம், குந்தவி, அக்சயன், சிவேநேஜினி, நர்த்தனன், கதிர், குழலி, எழிலி, மதுமிதா, மதுவந்தி, இராகுலன் ஆகியோ ரின் அன்புப் பேத்தியும் அபூர்வி, அக்சயா, சபரிஷ், விதுரிக்கா, அரிஷகரன், அதிபதிசன், அருநியன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகள் பூவோடை மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**0776529054** **தகவல்: குடும்பத்தினர்.**

(CS 23136/15/17)

## முல்லையில்...

ணமாக பாடசாலை மாணவன் ஒருவன் நேற்றுப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். மற்றொரு மாணவன் காயமடைந்துள்ளான். இதேவேளை, யாழ்ப்பாணம் மணத்தறை வீதியில் தென்னை மரத்தை மின்னல் தாக்கியதில் அது தீப்பற்றி எரிந்துள்ளது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தொட்டியடிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மின்னல் தாக்குதலில் விசுவமடு மகா வித்தியாலயத்தில் கற்கும் த.தயானந்தா (வயது-17) என்ற மாணவன் உயிரிழந்திருந்தான். மற்றொரு மாணவன் காயமடைந்துள்ளான்.
இரு மாணவர்களும் அருகிலுள்ள வர்த்தக நிலையத்துக்குச் சென்று திரும்பும்போது திடீரென மழை பொழிந்துள்ளது. மழையிலிருந்து தப்புவதற்காக நாவல் மரத்தின் கீழ் ஒதுங்கியுள்ளனர். இதன்போது மின்னல் தாக்கியுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான மாணவர்கள் இருவரும் தர்மபுரம் மருத்துவமனைக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டனர். தயானந்தா உயிரிழந்தமை மருத்துவமனையில் உறுதி செய்யப்பட்டது. மற்றைய மாணவன் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டான்.
இதேவேளை கடும் காற்றால் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் பயன்தரு மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. வீட்டின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள் ளதுடன் வாழை, முருங்கை போன்ற பயன்தரு மரங்கள் வீழ்ந்துள்ளன. வீட்டின் ஒரு அறையின் மேல் கூரைத் தகரங்கள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் பப்பாசி மரமும் முறிந்து வீழ்ந்துள்ளது. வீட்டுச் சுவர் கல் இடிந்து வீழ்ந்துள்ளது. குடும்பப் பெண் காயமடைந்துள்ளார். இன்னும் ஒருவர் வீட்டில் நின்ற தென்னை மரத்தில் மின்னல் தாக்கியதில் தென்னைமரம் முறிந்து வீழ்ந்துள்ளது. விசுவமடு பகுதியில் உள்ள சிவில் பாதுகாப்பு திணைக்களத் தின் விவசாய பண்ணையில் கடும் காற்றால் பயிர்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் நேற்று மாலை மழை பெய்யும்போது, மின்னல் தாக்கியதில் 2 தென்னைகள் தீப்பற்றி எரிந்தன. மாநகர சபையின் தீயணைப்பு பிரிவின் ஊடாக தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதேவேளை அந்தப் பகுதியிலிருந்து 3 வீடுகளின் தொலைக்காட்சிப் பெட்டிகளும் சேதமடைந்துள்ளன.
(ஒ.5,246,105,ரி3)

## மழை...

போதும், வறட்சியும் வாட்டி வதைக்கின்றது. வடக்கில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களும் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 720 குடும்பங்க ளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 504 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாண மாவட்டத்தில், நெடுந்தீவில் ஆயிரத்து 31 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 71 பேரும், வேலணையில் 2 ஆயிரத்து 798 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 642 பேரும், ஊர்காவற்றுறையில் 2 ஆயிரத்து 422 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 848 பேரும், மருதங்கேணியில் ஆயிரத்து 60 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 630 பேரும், காரைநகரில் 2 ஆயிரத்து 760 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 297 பேரும், சாவகச்சேரியில் 3 ஆயிரத்து 361 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 484 பேரும், கரவெட்டியில் 336 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 64 பேரும், உடுவிலில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
வவுனியாவில் வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேரும் மேலும் மாங்குளத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.
மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 310 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 649 பேரும், முசலியில் 3 ஆயிரத்து 722 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 627 பேரும், மாந்தை மேற்கில் 5 ஆயிரத்து 808 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 730 பேரும், கடும் காற்றால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும், மன்னார் நகரத்தில் வறட்சியால் 2 ஆயிரத்து 45 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 460 பேரும், மடுவில் 2 ஆயிரத்து 358 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 850 பேர் என்று மாவட்டத்தில் 16 ஆயிரத்து 244 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 326 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேரும், பூநகரியில் ஆயிரத்து 631 குடும்பங்களைச் சேர்ந்த 550 பேருமாக மாவட்டத்தில் மொத்தம் ஆயிரத்து 696 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 720 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 967 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 296 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் மொத்தமாக ஆயிரத்து 967 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 296 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மின்னல் தாக்கத்தின் காரணமாக மூவர் உயிரிழந்துள்ளனர். இருவர் காயமடைந்துள்ளனர். மன்னார் மற்றும் மாங்குளம் பகுதிகளில் தலா ஒரு வீடு வீதம் இரண்டு வீடுகள் கடும் காற்றின் காரணமாக சேதமடைந்துள்ளன. (ஒ.5,21)


## நாட்டை...

விபத்துக்களால் மாத்திரம் 42 பேர் உயிரிழந்துள்ள நிலையில் நேற்றைய தினமும் முல்லைத்தீவு மற்றும் கண்டியில் இடம்பெற்ற இருபெரும் விபத்துக்களில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.
முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முறிகண்டி செல்வபுரம் பகுதியில், பதுளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து வீதியை விட்டு விலகி தடம்புரண்டது. ஒருவர் காயமடைந்தார்.
கண்டியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மூடுந்து, மகிழுந்து விபத்தில் குழந்தை உள்ளிட்ட 4பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் கண்டி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
(ஒ.5,21)

## நிறைவேற்று...

அரச தலைவர் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவதற்கு முனைப்புக் காட்டும் ஒரு சூழலில் ஐக்கிய தேசியக் கட்சி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்துள்ள நிறைவேற்று அதிகார ஒழிப்பு, 20ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிப்பதாக தெரிவித்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி தற்போது இவ்வாறானதொரு நிலைப்பாட்டை, அரச தலைவர் தேர்தல் நெருங்கும் நிலையில் அறிவித்துள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் அமைச்சருமான அஜித் பி பெரேரா தெரிவித்ததாவது:
அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் அரசமைப்பை மாற்றியமைப்பது நடைமுறைக்கு சாத்தியமான விடயமல்ல. 2020ஆம் ஆண்டு தெரிவாகும் அரச தலைவரும் நிறைவேற்று அதிகாரம் உடையவராகவே இருப்பார். நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட வேண்டுமானால் அரசமைப்பில் இதுவரையில் திருத்தம் எதுவும் மேற்கொள்ளப்படாமல் இருக்கும் 4ஆவது உறுப்புரை பொது வாக்கெடுப்பு மூலம், மக்களின் அனுமதியுடன் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
இனவாதத்தின் ஊடாக இவ்வளவு காலமும் ஆட்சி புரிந்த ராஜபக்ச குடும்பத்தினருக்கு அடுத்த அரச தலைவர் தேர்தலில் மக்களின் ஆதரவு கிடைக்கப் போவதில்லை. அதையும் மீறி பொதுமக்கள் முன்னணி சார்பில் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் களமிறக்கப்படுவாராக இருந்தால் அவர் தோல்வியின் சின்னமாக கருதப்படுவார் என்றார்.
(ஒ.5)

# சதாவதானி கதிரவேற்பிள்ளை



யாழ்ப்பாணத்து புலோலியிலே சைவாசாரத்திற் சிறந்த நாகப்பிள்ளை என்பாருக்கு 1871ஆம் ஆண்டில் மகனாகப் பிறந்தவர்தான் கதிரவேற்பிள்ளை. இளமையிலேயே சுறுசுறுப்பு மிக்கவராயும் ஞாபகசக்தி மிகுந்தவராகக் காணப்பட்டார் இவர். வித்தியாரம்பம் செய்யப்பட்ட பின்னர் ஊரிலிருந்த ஒரு பாடசாலையிலே கல்வியினைத் தொடர்ந்தார் கதிரவேற்பிள்ளை. இருப்பினும் வறுமையின் காரணமாய் தொடர்ந்து கற்க முடியாமல் ஆறாம் வகுப்புடன் பாடசாலைக் கல்வியை நிறுத்திக்கொண்டார். அதன்பின்னர் சிதம்பரப்பிள்ளை எனும் நொத்தரிசுக்கு உதவியாளராய் வேலைக்குச் சேர்ந்துகொண்டார். சிறிது காலம் செல்ல சிதம்பரப்பிள்ளையுடன் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாய் வேலையை விட்டும் நீங்கிய கதிரவேற்பிள்ளை, தமிழ்நாடு சென்று தமிழ் மற்றும் சமஸ்கிருதம் கற்றோரை தேடிக்கண்டு இரு மொழிகளையும் சிறப்புறக் கற்றார்.

**இலக்கணம் இலக்கியம் அறிந்தார்**

அங்கே அவர் திருகோணமலை கனகசுந்தரம்பிள்ளையினையும் சந்தித்து தொல்காப்பியத்தினையும் அவரிடம் திரிபறக்கற்றார். சங்க இலக்கியங்களையும் கேட்டறிந்தார். பிற்கால இலக்கியங்களிலும் தன் புலமையினை வளர்த்துக்கொண்டார். தமிழ்நாட்டிலே எந்தச் சபையிலும் எந்தச் தலைப்பிலும், எவருக்கும் அஞ்சாது சொற்பொழிவாற்றும் திறனை வளர்த்துக்கொண்டவர் கதிரவேற்பிள்ளை. அவர் வாயிலிருந்து சொற்கள் இலாவகமாய் பொங்கிப் பிரவாகித்தன. அவர் நடமாடிய இடங்களிலே அவரினைவிடச் சிறந்த சொற்பொழிவாளர் யாரும் இல்லை என்ற பெயரினைப் பெற்றுக்கொண்டார். சமயோசித புத்தியும் இவருக்கு வாய்த்திருந்தது. பேரிலக்கணமாகிய தொல்காப்பியமும், பேரிலக்கியமாகிய திருக்குறளும் இவர் நாவில் நடனமிட்டது.

கதிரவேற்பிள்ளை சில நூல்களுஞ் செய்துள்ளார். அவர் தனது சிவசேத்திராலய மகோற்சவ உண்மைவிளக்கம் என்கின்ற நூலில் சொல்லியிருக்கின்ற அவையடக்கப் பாடலை இங்கு கீழே பாருங்கள்.

**நல்ல யாழ்ப்பாண மேலைப்பு லோலியி**
**னாளுமெங்கட் கருள்செய் வந்துறை**
**செல்வ னாகும் கதிரையில் வேலவன்**
**சீரடித்துணை செய்துணை யாலுல**
**கல்ல லோட வறிவில னீங்கிதை**
**யாற்றி னேன்குறை யாண்டிட லீங்கிது**
**மல்கு நந்தா மணிவிளக் காயெழு**
**மாசிலெந்தை யருளுண்டு முண்மையே**
**மேலைப் புலோலியிலே ஒவ்வொரு நாளும்**

எங்களுக்கு அருள் செய்யவேண்டிக் கதிரை வேலவர் வந்துள்ளார்.

அவரருளாள் அல்லல்கள் விட்டு நீங்கும். அறிவிலனாகிய யான் ஈங்கிதை உணரமாட்டேன். குறைபொறுக்க எந்தை அருள் எமக்குண்டு இஃதுண்மை என்கிறது இப்பாடல்.

கதிரவேற்பிள்ளை செய்த மற்றொரு நூலாகிய சுப்பிரமணிய பராக்கிரமத்திலிருந்து பாடலொன்றை இங்கே பாருங்கள்.

**இடந்தானு முணரானை யின்முருகை**
**யெல்லாங்**
**கடந்தானை அருளாந்தன்**
**கடலானை வெல்கைக்**
**கிடந்தானை யெப்பொருளுங்**
**கிடப்பானைச் சூர்க்கா**
**நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே**
**நம்பரனை யேத்தாத நாவென்ன நாவே.**

கதிரவேற்பிள்ளை கூர்மபுராணம் மற்றும் பழனித் தலபுராணம் என்பவற்றுக்கு உரையும் செய்துள்ளார். சைவசந்திரிகை, சைவ சித்தாந்தம் எனும் நூல்களையும் செய்துள்ளார். இவர் செய்த அகராதி யாழ்ப்பாண அகராதி என வழங்கப்படுகின்றது. இந்த அகராதியை கண்ணுற்ற வையாபுரிப்பிள்ளை 'கதிரவேற்பிள்ளை வெளியிட்ட அகராதியே திருத்தமும், பொருத்தமும் கொண்டு, பிழைகளறப் பதிப்பித்த முதற் பேரகராதி!' எனப் போற்றினார். மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவுனரும், பாலவநத்தம் ஜமீந்தாருமாகிய பாண்டித்துரைத் தேவர், அந்த அகராதியைக் கண்ணுற்ற போது அக மகிழ்ந்து,

பூவில் இடைகடை ஆதிஎழுத்தின் முன்பேருறப் பதித்த புத்தகங்கள்

**யாவும் இடை கடை எனவே யாழ்பாணப்**
**புலோலி நகரின்மா சீர்த்தி**
**பாவுபுதுச் சந்நிதியான் அருட்கதிரை**
**வேற்புலவன் பதித்த மேன்மை**
**மேவும் அகராதியிதே முதலதெனற்**
**கிதன்பெயரே விளக்கும் அன்றே**
**என்றொரு சிறப்புப்பாயிரஞ் செய்தனுப்பினார்.**

இவர் மாயாவாதிகளை கண்டிப்பதில் முன்னிற்பவர். அதனால் வித்துவான்கள் பலரும் காசிவாசி செந்திநாதையர் தலைமையிற்கூடி இவருக்கு 'மாயாவாததுவம்சகோளரி' என்றொரு பட்டத்தினை வழங்கினார்கள். இவருக்கு வேறு பல பட்டங்களும் வந்து சேர்ந்ததுண்டு.

இராமலிங்க சுவாமிகள் பாடிய பாடல்கள் அருட்பாக்கள் அல்லவென்றும் அவை மருட்பாக்கள் என்றும் எழுதிய கண்டனங்கள் காரணமாய் சென்னை நீதிமன்றில் நடந்த விவாதத்திலே கதிரவேற்பிள்ளை அவர்கள் வெற்றிபெற்றார்கள். இது 1904ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்றது. இது 'அருட்பா மறுப்பு விஜய மகாசரபம்' எனும் பெயரால் சிறிகாஞ்சி பூஷண அச்சியந்திரசாலையிலிருந்த வெளியாகிய நூலால் அறியப்படுகின்றது.

அட்டாவதானம், சதாவதானம் செய்வதிலும் கதிரவேற்பிள்ளை வல்லவர். இதனால் அவர் பெயர் சதாவதானி ந.கதிரவேற்பிள்ளை என வழங்குவதாயிற்று. வி. உலகநாத முதலியார், வி.கலியாணசுந்தர முதலியார் என்போர் இவர் மாணக்கருள் குறித்துச் சொல்லப்படக் கூடியவர்கள்.

இத்துணைச் சிறப்புப்பெற்ற புலோலி சதாவதானி. ந.கதிரவேற்பிள்ளை 1907ஆம் ஆண்டிலே இறைவனடி சேர்ந்தார். வரலாறு ஆனார்.

**நன்றி இணையம்**

தமிழ்நாட்டிலே எந்தச் சபையிலும் எந்தச் தலைப்பிலும், எவருக்கும் அஞ்சாது சொற்பொழிவாற்றும் திறனை வளர்த்துக்கொண்டவர் கதிரவேற்பிள்ளை. அவர் வாயிலிருந்து சொற்கள் இலாவகமாய் பொங்கிப் பிரவாகித்தன. அவர் நடமாடிய இடங்களிலே அவரினைவிடச் சிறந்த சொற்பொழிவாளர் யாரும் இல்லை என்ற பெயரினைப் பெற்றுக்கொண்டார். சமயோசித புத்தியும் இவருக்கு வாய்த்திருந்தது. பேரிலக்கணமாகிய தொல்காப்பியமும், பேரிலக்கியமாகிய திருக்குறளும் இவர் நாவில் நடனமிட்டது.

# காலதாமத திருமணத்திற்கு என்ன காரணம்?

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன' என்பார்கள். சிலருக்கு மிக எளிதாக நடைபெறும் திருமணம், சிலருக்கு மிகவும் சிரமப்பட்டு வரன் தேடியும், சரியான வரன் கிடைக்காமலும், அப்படியே கிடைத்தாலும், பல்வேறு காரணங்களால் தடைப்பட்டும் வருவதை நாம் அனுபவத்தில் காணமுடிகின்றது.

**திருமணம்**

சிலருக்கு 30 வயதுக்கு மேல் பல வருடங்கள் ஆகியும், திருமணம் நடைபெறாமல் கஷ்டப்படுகின்றனர். சிலருக்கு திருமண பிராப்தமே கைகூடி வருவதில்லை. இப்படி திருமணத்தில் ஏற்படும் தடை தாமதத்துக்கு என்ன காரணம் என்பது பற்றி, ஜோதிடச்சுடர் ந.ஞானரதம்ஜோதிடச்சுடர் ந.ஞானரதத்தைக் கேட்டோம். அதற்கு அவர் கூறிய பதில்களின் தொகுப்பு இதோ உங்கள் பார்வைக்காக...

பொதுவாக, பெற்றோர்கள் தங்கள் மகன் அல்லது மகள் திருமண வயதை அடையும் போது, திருமணம் செய்துவிட வேண்டும் என்றே எண்ணுவார்கள். சொந்தத்தில், தெரிந்தவர்கள் மூலம் வரன் தேடத் தொடங்குவார்கள்.

அப்படியும் அமையாதபட்சத்தில், திருமண தகவல் மையத்தில் பதிவுசெய்து பார்க்க ஆரம்பிப்பார்கள். இருப்பினும், அவர்களுக்கு திருமணம் கைகூடாமல் இழுத்துக் கொண்டே போவதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

இன்னும் சிலருக்கு நல்ல சம்பளம், படிப்பு, வேலை, சொத்து, சொகுசு வாகனம், அழகு, நல்ல பண்புகள் இருந்தாலும் திருமணம் காலதாமதமாகிறது. வேறு சிலருக்கு வரன் முடிவது போன்று வந்து, தட்டிச் சென்று விடுகிறது.

**ஜாதகம் காரணமா?**

இதற்கெல்லாம் காரணம் என்னவென்று அவர்களது ஜாதகத்தை ஆராய்ந்துபார்த்தால், கண்டுபிடித்து விடலாம். ஜாதகக் கட்டத்தில் லக்னத்துக்கு அடுத்த வீடான குடும்ப ஸ்தானம் என்று சொல்லப்படும் இரண்டாவது ஸ்தானம் மற்றும் களத்திர ஸ்தானம் என்ற சொல்லப்படுகின்ற ஏழாமிடமும் மற்றும் புத்திர ஸ்தானம் என்று சொல்லக்கூடிய ஐந்தாமிடமும் மற்றும் படுக்கை ஸ்தானம் என்று சொல்லக்கூடிய பன்னிரண்டாமிடமும் நன்றாக இருக்கவேண்டும்.



இதற்கும் அவர்களின் தகுதிக்கும் சம்பந்தம் இல்லை. பொருளாதாரம் அதிகம் இருப்பவர்களுக்குக் கூட தங்கள் பிள்ளைகளின் திருமணம் தள்ளிப்போவதைப் பார்க்கின்றோம். ஆனால், ஏழை எளியவர்களுக்கெல்லாம் திருமணம் காலத்தே நடைபெறுவதையும் கண்கூடாகப் பார்க்க முடிகிறது

**திருமணத்தைத் தாமதமாக்கும் கிரக அமைப்புகள்:**

* களத்திர ஸ்தானம் என்று சொல்லப்படும் 7 ஆம் இடத்தில் சனி வீற்றிருப்பது பாப கிரகப் பார்வை ஏழாமிடத்தில் விழுவது, ராகு, கேதுக்கள் 7 ஆம் இடத்தில் அமருவது, 7 ஆம் இடத்துக்குரிய கிரகம் (களத்திர ஸ்தானாதிபதி) 6,8,12 ல் மறைவது,

சூரியன், செவ்வாய் சேர்ந்து 7ஆம் இடத்தில் இருப்பது சனி மற்றும் செவ்வாய் இணைந்து 7ஆம் இடத்தைப் பார்ப்பது ஆகிய அமைப்புகள் இருந்தால், திரு மணத்தடையை ஏற்படுத்தும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அரச தலைவர் தேர்தலில் தமிழர்களின் நிலை என்ன?

2015ஆம் ஆண்டின் அரச தலைவர் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் பெரிதும் பேசுபொருளாக இருந்த புதிய அரசமைப்பு, இனப்பிரச்சினைக்கான தீர்வு, எல்லாவற்றிலும் முக்கியமான நல்லாட்சி மற்றும் ஊழல் மோசடி ஒழிப்பு ஆகியவற்றில் எவையும் நிறைவேற்றப்படாதபோதும் அடுத்த அரசதலைவர் தேர்தல் குறித்தும் அதில் யார் போட்டியிடப் போகிறார்கள் என்பது குறித்துமே இப்போது அதிகம் பேசப்படுகின்றன. கடந்த தேர்தல் வாக்குறுதிகள் குறித்து அக்கறைப்படுவோர் யாருமில்லை.

கடந்த ஆட்சியில் ஊழல் பேர் வழிகள், குடும்ப ஆட்சிக்கு வழிவகுத்தோர் என்று ஒதுக்கப்பட்ட ராஜபக்ச குடும்பத்தினரே அடுத்த தேர்தலின் கதாநாயகர்களாக உயர்ந்திருக்கிறார்கள். சிங்கள இனவாத மற்றும் பௌத்த மதவாத வேட்டைக்கு அவர்கள் தயாராகி வருகின்றார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

மறுபுறத்தில் நிறைவேற்று அதிகார அரசதலைவர் முறையை ஒழிக்க வேண்டும் என்பதற்கு கடந்த தேர்தலில் முன்னின்ற ரணில் விக்கிரமசிங்க அடுத்த தேர்தலில் அந்தப் பதவிக்குத் தானே போட்டியிடுவதற்கு முண்டியடிக்கின்றார் என்றும் செய்திகள் வருகின்றன. அதிகாரமற்ற, எதிர்காலத்தில் ஒழிக்கப்படப்போகின்ற ஒரு பதவிக்காக ஏன் ரணில் ஏங்குகிறார் என்கிற கேள்வியும் இங்கு முக்கியமானது. அப்படி ரணில் அந்தப் பதவியில் கண் வைக்கிறார் என்றாலே நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படப் போகின்றது என்பது வெறும் கட்டுக்கதைதான் என்பதும் ரணிலை அறிந்த எல்லோருக்கும் தெரிந்ததே!

மற்றொரு புறத்தில் மீண்டும் ஒரு தடவை அரச தலைவராக மாட்டேன் என்று சத்தியம் செய்யாத குறையாக பதவிக்கு வந்தவரான தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் எந்த விதத்தில் மீண்டும் தானே அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியும் என்பது பற்றிச் சிந்தித்து வருகிறார் என்றும் செய்திகள் வருகின்றன.

இப்படி அரச தலைவர் தேர்தல் குறித்தும் அதில் யார் போட்டியிடப்போகிறார்கள் என்றும் தெற்குப் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் அது குறித்து தமிழர் தரப்பில் ஏதாவது எதிர்வினையாற்றல்கள், கருத்தாடல்கள், கொள்கை வகுப்புகள் இடம்பெறுகின்றனவா என்று கேட்டால் இல்லை என்பதே பதிலாக இருக்கின்றது. தேர்தல் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்கிற வழக்கமான மனோநிலையில், விட்டேத்தியான போக்கிலேயே தமிழ் அரசியல் களம் இந்த விடயத்தைக் கையாள்கின்றது என்பது வெளிப்படையானது.

தமிழ் அரசியலின் இத்தகைய போக்கு பிரச்சினைக்குரியது, எதிர்காலத்தில் சிக்கலானது என்கிற அபாயச் சங்கை ஊதியிருக்கிறார் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன. அரசதலைவர் தேர்தலில் தமிழர் ஒருவரை நிறுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்றும் அந்த நபர் வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனாக இருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளதாகச் செய்திகள் அடிபடுகின்றன என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். அத்தகைய நகர்வு தவறானது என்பதையும் அது தனிச் சிங்கள வாக்குளினால் ஒரு அரசதலைவர் தேர்தெடுக்கப்படும் வாய்ப்பை வழங்கிவிடும் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். அரசதலைவர் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் எவ்வளவு முக்கியமானவை என்பதையும் விளக்கியிருக்கிறார்.

அவர் கூறுகின்ற கருத்துக்கள் ஆழமாக ஆராயப்பட வேண்டியவையே! அவர் கூறுவதின்படி தமிழர் தரப்பிலிருந்து அரச தலைவர் தேர்தலில் ஒருவர் நிறுத்தப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டால் அது சரியானதா இல்லையா, இந்தத் தேர்தலை எப்படி அணுகுவது என்ற விடயங்களை நன்கு அலசி ஆராய்ந்து தமிழர்களுக்கு நன்மைபயக்கக்கூடிய வகையில் அதனைக் கையாள்வதற்கு, கட்சிகளின் அரசியல் நிரலைக் கடந்து இந்த விடயத்தைக் கையாள்வதற்கு ஒரு தெளிவான கொள்கைவகுப்புத் திட்டமிடல் தேவை. கடைசிவரை இருந்துவிட்டு யாரோ ஒருவரை ஆதரித்து அவருடன் இதயத்தால் ஒப்பந்தங்கள் இருக்கின்றன என்று கூறி ஏமாளிகளாகத் தொடர்ந்தும் நின்றுகொண்டிருப்பதில் பயனில்லை. இனத்தின் நலன் கருதி, நன்மை கருதி இந்த விடயத்தில் தமிழ் அரசியல் தரப்புகள் ஒருங்கிணைந்த ஒரு கொள்கையின் கீழ் செயற்படுவதற்கு முன்வரவேண்டும். அதுமட்டுமல்லாமல் அரசதலைவரைத் தீர்மானிக்கக்கூடிய சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் ஒன்றிணைத்து அடுத்த அரச தலைவரையும் நாடாளுமன்றத்தையும் பயன்படுத்திக்கொள்ளத்தக்க திடமான கொள்கை ஒன்றை முன்னெடுப்பதற்கான அரசியலையும் முன்னெடுக்கவேண்டும். அதற்கான பணிகளை இப்போதிருந்தே தொடங்கவேண்டும்.





# பொறிக்குள் சிக்கியுள்ள கோத்தபாய

இந்துமதி

போரை வழி நடத்தியவர் என்ற வகையில் போர்க் குற்றங்களுக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலரான கோத்தபாயவே பொறுப்புக் கூற வேண்டுமெனப் பன்னாட்டு சட்ட நிபுணரான ஸ்கொட் கில்மோர் தெரிவித்துள்ளமை பன்னாட்டு அளவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. இறுதிப்போரின் போதும் அதன் பின்னரும் இலங்கையில் போர்க் குற்றங்களே இடம்பெறவில்லையெனக் கூறப்பட்டு வரும் நிலையில் போர்க் குற்றம் தொடர்பான இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

**பாதிக்கப்பட்டோர் குற்றச்சாட்டு**

இறுதிப் போரின் போதும் அதன் பின்னரும் படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் பாதிக்கப்பட்டவர்களால் ஆதாரபூர்வமாக வெளியிடப்பட்டன. ஆனால் இவை போலியானவையென இலங்கைத் தரப்பால் மறுத்துரைக்கப்படுகின்றது. போர்க்குற்றங்கள் இடம்பெற்றன என்று கூறப்படும் காலப்பகுதியில் மகிந்த ராஜபக்ச அரச தலைவராகவும் கோத்தபாய பாதுகாப்புச் செயலராகவும் பதவி வகித்துள்ளனர். படைகளைத் தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த கோத்தபாய படை நடவடிக்கைகள் சகலதுக்கும் பொறுப்பாக இருந்துள்ளார்.

அதுமட்டுமல்லாது அந்தக் காலத்தின் போது ஆள்கள் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டுக் கொலை செய்யப்படுவது சாதாரணமாகவே இடம்பெற்றது. அரசுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த பலர் கடத்திச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களின் கதி என்ன என்பது தொடர்பாக இதுவரையில் எதுவுமே தெரியவில்லை. அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட்ட ஊடகவியர்களும் கோத்தபாய பதவி வகித்த போது கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் அப்போதைய அரசு இவை தொடர்பாகக் கவனத்தில் கொள்ளவேயில்லை. அரசு இயந்திரம் தவறாகச் செயற்பட்டதை இது தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

**கோத்தாவுக்கு பொறி**

ஆனால் இவற்றையெல்லாம் மறந்துவிட்டு கோத்தபாய நாட்டின் அரச தலைவராகும் வகையில் வியூகங்களை வகுத்தார். தாமே அரச தலைவர் வேட்பாளர் எனவும் வெளிப்படையாகக் கூறி வருகின்றார். இதற்கு அமெரிக்கக் குடியுரிமை தடையாக இருந்தது. இதை நீக்குவதற்குத் தேவையான ஆவணங்களை அமெரிக்க இராஜதந்திர திணைக்களத்திடம் ஒப்படைத்த அவர் இறுதி முடிவொன்றை எட்டுவதற்காக அமெரிக்கா சென்றார். அவரை வீழ்த்தி விடுவதற்கான பொறியொன்று அங்கு தயாராக இருந்ததை அவர் அறிந்திருக்கவில்லை.

தற்போது கனடாவில் வசிக்கும் றோய் சமாதானம் என்னும் இலங்கைத் தமிழர் தாம் இலங்கையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது சித்திரவதை செய்யப்பட்டதாகவும் அதற்குத் தமக்கு நட்டஈடு வழங்க வேண்டுமெனவும் தெரிவித்து அமெரிக்க நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். தாம் சித்திரவதைகளை அனுபவித்தமைக்கு கோத்தபாயவே காரணமாக இருந்துள்ளரெனவும் அவர் இந்த வழக்கில் தெரிவித்துள்ளார். இந்த வழக்கை பிரபல பன்னாட்டு சட்ட நிபுணரான ஸ்கொட் கில்மோர் பொறுப்பேற்று நடத்துகின்றார். இந்த வழக்கைத் தவிர பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகளும் கோத்தபாயவுக்கு எதிராக வழக்கொன்றை அமெரிக்காவில் தாக்கல் செய்துள்ளார். தமது தந்தையின் கொலையுடன் கோத்தபாயவுக்குத் தொடர்பிருந்ததாகத் தெரிவித்தே அவர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். அமெரிக்கா சென்றிருந்த கோத்தபாய இவற்றையெல்லாம் எதிர்பார்த்திருக்க மாட்டார். நீதிமன்ற அழைப்பாணை அவரிடம் கையளிக்கப்பட்டதால் இந்த வழக்குகளிலிருந்து அவரால் தப்பிக்கவே முடியாது. இதைவிட லண்டனிலும் இவருக்கெதிராக நூற்றுக் கணக்கான வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அரச தலைவர் தேர்தலில் இவர் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக வேறு ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்துக்குள் மகிந்த அணியினர் தள்ளப்பட்டுள்ளனர்.

**மகிந்தவுக்கு வாய்ப்பாகலாம்**

சிங்கள இனவாதிகள் கோத்தபாய விடயத்தைக் கையில் தூக்கிப்பிடித்துக்கொண்டு தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுவார்களென்பதை எதிர்பார்க்க முடியும். மகிந்தவுக்கும் இதுவொரு நல்ல வாய்ப்பாகவே அமைந்துவிடும். கோத்தபாய அரச தலைவராக வருவதில் அவருக்கு பூரண விருப்பம் இருப்பதாக எண்ணிவிட முடியாது. ஏனென்றால் கோத்தபாயவை அவர் முழுதாக நம்புவதில்லை. இந்த நிலையில் கோத்தபாயவுக்குப் பதிலாக வேறொருவரைக் களமிறக்குவதையே அவர் விரும்புவார்..

இதேவேளை லசந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கு இழப்பீடு கோரி கோத்தபாயவுக்கு எதிராக லசந்தவின் மகளால் அமெரிக்க நீதிமன்றமொன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் கோத்தபாய குற்றவாளியென்பது நிரூபிக்கப்பட்டால் பெரிய தொகையொன்றை அவர் இழப்பீடாக வழங்கவேண்டும். அவ்வாறில்லாதுவிட்டால் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும். அத்துடன் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் அவரது குடியுரிமையை அமெரிக்கா நீக்குமென எதிர்பார்க்கவும் முடியாது.

றோய் சமாதானம் இலங்கைக்கு வந்து சரத்பொன்சேகவுடன் ஆலோசித்த பின்னரே வழக்கைத் தாக்கல் செய்ததாகக் கூறப்படும் நிலையில் இந்த வழக்கு விசாரணையின் போது பொன்சேகா கோத்தபாயவுக்கு எதிராகச் சாட்சியம் அளித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

சகலதையும் தொகுத்துப்பார்க்கும்போது கோத்தபாய மீள முடியானதொரு பொறிக்குள் சிக்கியுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது.

## தரம் 5
# புலமைப் பரிசில் பரீட்சைக்கு விரும்பியவர்கள் தோற்றலாம்
### கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20
தரம் 5ஆம் ஆண்டில் கல்வி கற்கின்ற புலமைப்பரிசிலுக்கு உரித்துடைய, வருமான எல்லைக்கு உட்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தவிர்ந்த ஏனைய சகல மாணவர்களையும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றச் செய்வது கட்டாயமில்லை. இது தொடர்பில் மாணவர்கள் மீது எவ்விதத்திலும் அழுத்தம் செலுத்தப்படலாகாது. இவ்வாறு கல்வி அமைச்சின் செயலர் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.
கல்வி அமைச்சின் மேலதிக செயலர் ஹேமந்த பிரேமதிலக்க கொழும்பு ஊடகத்துக்கு இது தொடர்பில் தெரிவித்ததாவது:
இதன்படி 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் திகதியன்று கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பிலான சுற்றறிக்கை அந்தத் திகதி முதல் நடைமுறைக்கு வருவதால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய கட்டாயம் இல்லை. இந்தச் சுற்றறிக்கை அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இதனால் மாணவர்களும் பெற்றோர்களும் பரீட்சைக்குத் தோற்றுவது குறித்து தமது விருப்பின் அடிப்படையில் தீர்மானத்தை மேற்கொள்ள முடியும். இது பாடசாலை மட்டத்தில் எவ்வித பிரச்சினையை யும் ஏற்படுத்தாது, என்றும் அவர் விளக்கமளித்தார்.
எவ்வாறாயினும் குறிப்பிட்ட வருமான எல்லைக்குட்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள கற்றலில் திறமைமிக்க மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்கும் புதிய பாடசாலைகளில் தரம் ஆறுக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கும் இந்தப் பரீட்சை அவசியம் என்பதால் இவ்வாறான குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவது கட்டாயமென்றும் அவர் கூறினார்.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் கல்வி அமைச்சின் செயலரால் வெளியிடப்பட்ட 1995/16 இலக்க சுற்றறிக்கையை இல்லாமல் செய்து பரீட்சை அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயம் இல்லையெனத் தெரிவிக்கும் 08/2019 இலக்க சுற்றறிக் கையை கல்வி அமைச்சு வெளியிட்டு வைத்துள்ளது.
அந்த சுற்றறிக்கையில், இதன் பின்னர் பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்கின்ற புலமைப் பரிசிலுக்கு உரித்துடைய வருமான எல்லைக்கு உட்பட்ட, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தவிர்ந்த ஏனைய சகல மாணவர்களையும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றச் செய்வது கட்டாயமில்லை. இது தொடர்பில் மாணவர்கள் மீது எவ்விதத்திலும் அழுத்தம் செலுத்தப்படலாகாது என்பதையும் கவனத்திற்கொள்ள விரும்புகின்றேன், என்றும் 08/2019 இலக்க சுற்றறிக்கையில் கல்வியமைச்சின் செயலர் கூறியுள் ளார்.
அத்துடன் ,மாணவர்களுக்கு தத்தமது விருப்பத்தின் பிரகாரம் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றாதிருப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க முடிவதுடன், இது தொடர்பாக பெற்றோர்களுக்கு அறிவுறுத்தி பெற்றோரது ஒருமைப்பாடு தொடர்பான தகவல்கள் அடங்கிய ஆவணக் கோவையை பாடசாலையில் பேணுதல் வேண்டும். 5 ஆம் தரத்துடன் நிறைவுபெறும் பாடசாலைகளில் கல்வி கற்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களுக்கு 6ஆம் தரத்துக்கு பாடசாலையை பெற்றுக் கொடுப்பது வலயக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பு, என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ஒ.5)

# மகிந்த விரல் நீட்டுபவரை வெற்றியடையச் செய்வோம்
### டிலான் சூளுரை

கொழும்பு, ஏப். 20
மகிந்த ராஜபக்ச பெயரிடும் அரச தலைவர் வேட்பாளரை ஏற்றுக்கொண்டு அவர் வெற்றி பெறுவதற்காக நாம் உழைக்கத் தயாராக இருக்கின்றோம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.
பதுளையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொதுமக்கள் முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றாக இணைந்து கூட்டணியை அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுக் கொண்டிருகின்றன.
உரிய நேரத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, அரச தலைவர் வேட்பாளருக்கான பெயரை அறிவிப்பார். அதன்போது நாம் அதனை ஏற்றுக் கொண்டு அவரது வெற்றிக்காக உழைப்பதற்கு தயாராகவே உள்ளோம்.
தற்போது ஐக்கிய தேசியக் கட்சியினுள் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதனை தீர்க்க முடியாது கட்சி தடுமாறிக்கொண்டிருக்கின்றது. அத்தகையவர்களால் எவ்வாறு நாட்டை நிர்வாகம் செய்ய முடியும் என்பதே எனது கேள்வி - என்றார். (ஒ.5.61)

# காங்கிரஸின் மாநகரசபை உறுப்பினர்கள் பதவி துறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்கள் இருவர் தமது பதவிகளிலிருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான தேர்தல் கடந்த ஆண்டு இடம்பெற்றது. இதன்போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் இருவர் விகிதாசாரப் பட்டியல் உறுப்பினர்களாத் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். திருமதி அஜந்தா மற்றும் சுகந்தினி ஆகிய இரு உறுப்பினர்களே பதவி விலகுவதாக கடிதம் மூலம் தேர்தல்கள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
(ஒ.5.105)

### இலங்கையின் செய்மதி
# பன்னாட்டு விண்வெளி மையத்தை அடைந்தது

கொழும்பு, ஏப். 20
இலங்கை வரலாற்றில் முதன் முறையாக, இலங்கைப் பொறியியலாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட இராவணா1 செய்மதி பன்னாட்டு விண்வெளி மையத்தைச் சென்றடைந்தது.
நேற்றுமுன்தினம் அதிகாலை 2.16 மணிக்கு அமெரிக்காவிலிருந்து பன்னாட்டு விண்வெளி ஆய்வு மையத்துக்கு கொண்டுசெல்லப்பட்ட செய்மதி விண்வெளி மையத்தை நேற்றுச் சென்றடைந்தது.
இந்தச் செய்மதியானது, எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதமளவில் விண்ணில் நிலைநிறுத்தப்படவுள்ளது. (ஒ.5)

## சங்குவேலியில் பொதுக்கூட்டமும் பரிசளிப்பும்

அளவெட்டி, ஏப். 20
சங்குவேலி தெற்கு சிறி அம்பாள் சனசமூக நிலையமும் போரூட் சிறி அம்பாள் மாதர் சேமிப்புக் கடன் வழங்கும் சங்கமும் இணைந்து நடத்தும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் பரிசளிப்பும் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும். இரு அமர்வுகளாக இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து சிறப்பிக்கவுள் ளார்.
தரம் ஐந்து புலமைப் பரிசில் ரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், க.பொ.த (சா.த), க.பொ.த.(உ.த) பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிப்பும் பரிசில் வழங்கலும், ஒழுங்கான சேமிப்புப் பழக்கம், கடன்மீளளிப்புக் கூட்டங்களுக்கு ஒழுங்கான வரவு, மற்றும் ஆகக்கூடிய சேமிப்பு அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான பரிசில் வழங்கல் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-36)

# மாணவனைக் காணவில்லை பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஏப். 20
வவுனியா உக்குளாங்குளத்தைச் சேர்ந்த சதீஜ்வரன் கோபிகன் என்ற மாணவனை நேற்றுமுன்தினம் மாலையிலிருந்து காணவில்லை என்று அவரது உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.
மாணவன் கடந்த ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதரண தரப் பரீட்சை எழுதியவர்.
வவுனியா வைரவப் புளியங்குளத்தில் நேற்றுமுன்தினம் மாலை இறுதியாக கண்டதாகவும் அதன் பின்னர் காணவில்லை என்றும் தெரிவித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் மாணவனின் தந்தை முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.



மாணவனை யாராவது அடையாளம் கண்டால் 0779169113 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தந்தை தெரிவித்துள்ளார்.
வவுனியாப் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
(ஒ.5.110)

# யாழில். நூறு பாடல்கள் ஒரே நாளில் அரங்கேற்றம்

சங்கப்புலவர் ஈழத்துப் பூதந்தேவனாரில் இருந்து வசாவிளான் தவமைந்தன் வரையிலான ஈழத்துக் கவிராயர்களின் நூறு பாடல்கள் ஒரே நாளில் ஒரே அரங்கில் அரங்கேற்றம் செய்யப்படவுள்ளன. இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நாளை இந்த நிகழ்வுகள் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட்டின் நெறியாள்கையில் பத்து பாடகர்கள் இருபத்தைக்கும் மேற்பட்ட பக்கவாத்தியக் கலைஞர்களுடன் இணைந்து இருபத்தொரு வகையான இசையரங்குககளாக இவ்வரங்கேற்றம் நிகழ்த்தப்பட வுள்ளது.
இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக தமிழிசை வாக்கேயக்காரர் பொன்.ஸ்ரீவாமதேவனும் சிறப்பு விருந்தினராக கலைஞர் வேல்.ஆனந்தனும் கலந்து கொள்கின்றனர். நல்லை ஆதீனக் குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சரிய சுவாமிகள், வண.மரிய சேவியர் அடிகள், அகத்தியர் அடிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர். அறுபது பாடல்கள் இந்த நிகழ்வுக்கென்று புதிதாக இசையாக்கம் செய்யப்பட்ட நூறு பாடல்களும் தொடர்ச்சியான ஒத்திகைகளையும் பெற்று இந்நிகழ்வு குரலோசை நுண்கலைகளின் தாயகம் என்னும் கலைமன்றத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. காலை ஒன்பது மணியிலிருந்து பிற்பகல் ஐந்துமணி வரை இடையறாது நடைபெறும் இந்த நிகழ்வில் இசை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். மதிய உணவுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ.5)

# தியாகதீபம் அன்னை பூபதியின் 31ஆவது நினைவு நிகழ்வுகள்

**யாழ்ப்பாணம்,ஏப்.20**
**இந்திய– இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக தமிழ் மக்களின் தேசத்தினுள் நுழைந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறி தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித் தொழிக்கும் வன்முறையில் இறங்கிய வேளை அகிம்சை வழியில் போராடிய அன்னை பூபதியின் 31ஆவது ஆண்டு நினைவு நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.**

அந்த வேளையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும் தமிழீழத் தேசியத்துக்கு ஆதரவாகவும் பொதுமக்கள் பல வகைகளில் தமது பங்களிப்பை வழங்கினார்கள்.

இந்தத் தேசத்துக்கான பங்களிப்புக்களின் சிகரமாக தியாகத்தின் அதியுயர் வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது.


இந்தியப் படை உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டுதமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்றுகோரிமட்டக்களப்புஅன்னையர் முன்னணியின் சார்பில் திருமதி பூபதி க்ணபதிப்பிள்ளை அகிம்சை வழியில் உணவொறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு மட்டக்களப்பு அமிர்தகழி சிறி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றலில் உள்ள குருந்த மர நிழலின் கீழ் அன்னை பூபதி தனது சாகும். வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். அவரது 31ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் தாயகப்பிரதேசத்தின் பல இடங்களிலும் நடைபெற்றுள்ளன.

நேற்று மட்டக்களப்பு நாவலடியில் அமைந்துள்ள அன்னை பூபதியின் சமாதியில் மலரஞ்சலி செலுத்தி, ஈகைச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது. முற்பகல் 9.30 மணிக்கு கிளிநொச்சில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அலுவலகமான அறிவகத்திலும், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக் கேட்போர் கூடத்திலும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலமையகத்திலும் , முல்லைத்தீவு கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனுடைய மக்கள் தொடர்பகத்திலும் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நடைபெற்றுள்ளன.

(க-7,46,37,160,222)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால்...


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால்...


முல்லைத்தீவில்...



பல்கலைக்கழக மாணவர்களால்....


மட்டக்களப்பு நினைவுத் தூபியில்...

## சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.20
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணம் நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு நிகழ்வுகள் கழக மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன.

கிராமிய விளையாட்டுக்களான பலூன் உடைத்தல், ஊசிக்கு நூல் கோர்த்தல், யோக்கற் சாப்பிடுதல், சாக்கு ஓட்டம், பணிஸ் சாப்பிடுதல், போத்தலில் தண்ணீர் நிரப்புதல், தலையணைசண்டை,யானைக்கு கண் வரைதல், குளம் கரை, முட்டி உடைத்தல், சங்கீதக் கதிரை, கயிறு இழுத்தல், கிளித்தட்டு, பிள்ளையார்ப் பேணிப் பந்து ஆகிய விளை யாட்டுக்கள் இடம்பெறவுள்ளன.

பிள்ளையார்ப் பேணிப் பந்து விளையாட்டு அன்றைய தினம் காலை 8 மணிக்கு நீராவியடி சிறுவர் கழக மைதானத்தில் இடம்பெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஜ)

## 13 கேணிகள் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.20
நெடுந்தீவு பிரதேச சபைக் குட்பட்ட 13 கேணிகள் மீள் சீரமைப்புச் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன என்று சபை செயலர் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச சபைக் குட்பட்ட 28 கேணிகளில் 15 ஏற்கனவே மீள்சீரமைப்பு செய்யப்பட்டன.

மீள்சீரமைப்பு செய்யப்படாத நிலையில் உள்ள மிகுதிக் கேணிகள் விரைவில் மீளச் சீரமைக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-50)

# 11ஆம் வட்டாரத்தில் 5 வேலைத்திட்டங்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப் .20
சாவகச்சேரி பிரதேச சபையின் பதினொராம் வட்டாரத்தில் மக்களால் 5 வேலைத் திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டன.

மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பான மக்கள் சந்திப்பு சாவகச்சேரி பிரதேச சபையின் வட்டாரம் 11 இல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது பொதுமக்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்ட 32 அபிவிருத்தி திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இவற்றில்முன்னுரிமைப்படுத்தும் வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வு இடம் பெற்றது.

இதில் 5 வேலைத் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன.

ஏ9 வீதியில் தொடங்கும் வேவில் மயான வீதி சீரமைப்பு,ஐயனார் கோவிலடி பொது நோக்கு மண்டப சீரமைப்பு,சனசமூக நிலைய விளையாட்டு மைதானம் அமைத்தல், ஆத்தியடி வீதி சீரமைப்பு, அம்மன் கோவில் முன் வீதி சீரமைப்பு என்பன இந்த திட்டங்களுக்குள் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் மக்கள் சந்திப்புக்களை வட்டார ரீதியில் நடத்தாது ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் நடத்தி அந்த பகுதி மக்களால் மிக அவசியம் என முன்னுரிமை படுத்தப்படும் வேலைத் திட்டங்களை தெரிவு செய்தால் அனைத்து பிரிவுகளுக்கும் நன்மை கிடைக்கும் என மக்கள் கருத்து தெரிவித்தனர்.

ஒரு வட்டாரத்துக்கு 5 வேலைத் திட்டங்கள் தான் முன்னெடுக்கப்படுமாயின் ஒவ்வொரு கிராம அலுவலகர் பிரிவில் இருந்தும் 2 அபிவிருத்தி திட்டங்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப் படவேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

வட்டாரத்தில் மேற் கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கருத்தமர்வு நடைபெறும் இடம் பற்றிய விவரங்கள் ஒலி பெருக்கி மூலமும், துண்டு பிரசுரங்கள் மூலமும் ஒவ்வொரு பிரிவுக்கும் வழங்கப்பட்ட போதிலும் கருத்தமர்வுக்கு வராத மக்கள் இவ்வாறான குற்றச் சாட்டை சுமத்துவது ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார். (ஜ-159, 9)

## பனை ஆராய்ச்சி வளாகத்தில் உணவு விற்பனையகம்

யாழ்ப்பாணம், ஏப்.20
யாழ்ப்பாணம் கைதடி பனை ஆராய்ச்சி வளாகத்தில் பனம் பொருள் உணவு விற்பனையகம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ந.இராஜேந்திரம் தெரிவித்தார்."பனை உற்பத்தியின் கீழ் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் பனம் பானங்கள் உள்ளிட்ட உணவு விற்பனையகம் ஒன்று பனை மரத்திலான பொருள்களில் தயாரிக்கப்படும் உணவகத்தில் விற்பனை செய்யும் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளோம். இவ்வாறு தயார் செய்யும் திட்டத்தின்பால் உடனடியாகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு குறித்த விற்பனையகம் ஆரம்பிக்கப்பட்டதும் பனாட்டு முதல் பனம் களி , பனம் பலகாரம் , பனம் பிட்டு உட்பட பல உணவுகளும் தயாரிக்கப்பட்டு விற்பனை இடம் பெறும் எனத் தெரிவித்தார். (ஜ-105)

## நகர சபை மக்கள் பங்களிப்பு கருத்தமர்வுக்கு வெறும் 3 பேர்

சாவகச்சேரி, ஏப். 20

மக்கள் பங்களிப்புடனான கருத்தமர்வுக் கூட்டத்துக்கு மூன்று பேர் மாத்திரம் கலந்து கொண்டதால், கருத்தமர்வு நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகரசபை நகரப் பகுதி வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

உள்ளூராட்சி சபைகளால் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பான கருத்தமர்வுகள் கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் அனைத்து உள்ளூராட்சி சபைகளாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி நகரசபை கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் சபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களிலும் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப் பிரசுர அறிவிப்புக்கள் மூலம் கருத்தமர்வுகள் நடைபெற்று மக்களால் முன்னுரிமைப்படுத்தி அபிவிருத்தி வேலைகள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன.

முன்னர் திட்டமிட்டவாறு சாவகச்சேரி நகர வட்டாரத்துக்கான கருத்தமர்வு நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு சபையின் பொன்விழா மண்டபத்தில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கருத்தமர்வுக்குக் குறைந்தது 15 பேராவது கலந்து கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருந்ததால் கோரம் காணாத நிலையில் கருத்தமர்வு நிறுத்தப்பட்டுள்ளதாகத் தவிசாளர் தெரிவித்தார்.

வட்டார அபிவிருத்தியில் மக்களுக்கு அக்கறையின்மை ஏற்பட்டுள்ளதால் இந்த வருடத்தில் சபையால் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னுரிமைப் பட்டியலில் சாவகச்சேரி நகரப் பகுதி வட்டாரத்துக்கு எந்தவொரு அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகளும் அனுப்ப வாய்ப்பில்லையென்று தெரிவிக்கப்பட்டது. (கு-9)

## வடக்கு மாகாணத்தில் தமிழ் இந்துக் கலை பண்பாட்டு பல்கலை அமைக்கவேண்டும்

### ஈ.சரவணபவன் எம்.பி. கோரிக்கை

வலி.மேற்கு, ஏப்.20

வடக்கு மாகாணத்தில் தமிழ் இந்துக் கலை பண்பாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் முன்வரவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கோரிக்கை முன்வைத்து கடிதம் எழுதியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் தமிழ் இந்து கலை பண்பாட்டுப் பல்கலைக்கழகம் அமைத்தல் தொடர்பாக எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜெயசேகரம் மேற்படிப் பல்கலைக்கழகம் அமைத்தல் தொடர்பான தீர்மானத்தை வடக்கு மாகாண சபையின் 122ஆவது அமர்வில் முன்மொழிந்துள்ளார். எனவே பல்கலைக்கழகம் அமைத்தல் தொடர்பான முறையான நியாயப்படுத்தல்களை முன்வைத்து கருத்திட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கோரி கடிதம் எழுதியுள்ளார். (ஐ-50)

## தியாகிகளை நினைவுகூர நாம் உறுதி எடுப்போம்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறைகூவல்

யாழ்ப்பாணம், ஏப்.20

இன விடுதலைக்காக தியாகமாகியவர்களை மதித்து, எமது சொந்த முயற்சியில் எமது வீடுகளில் அவர்களுக்கான நினைவேந்தலை மேற்கொள்ள வேண்டும், எமக்காக தியாகமாகியவர்களை நினைவு கூறுவதை எமது கலாசாரத்துக்குள் கொண்டுவரவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏற்பாடு செய்த அன்னை பூபதியின் 31 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்கள் இனத்துக்காக ஆயுதம் ஏந்தி நேரடியாகப் போராடிய வீரர்கள் இன்று உலகளாவிய ரீதியில் உயரிய சாதனை படைத்தவர்கள் என்று கருதப்பட்டார்கள். இந்த விடுதலை அமைப்பு வெற்றி பெறக்கூடாது என்று சிந்தித்து அனைத்து உலகமும் ஒருங்கிணைந்து இனப்படுகொலையைச் செய்து போராட்டத்தை தோக்கடிக்க தூண்டிய அளவுக்கு ஆயுதம் ஏந்திப் போராடிய வீரர்களுடைய தியாகங்கள் அனைவருக்கும் தெரிந்தது.

விடுதலைப்போராட்டத்தை கொச்சைப் படுத்தி, அது ஒரு அமைப்பினுடைய போராட்டம், ஒட்டுமொத்த தமிழர்களுடைய போராட்டம் அல்ல என்ற கோணத்தில் பொய்ப் பிரசாரங்களைச் செய்து போராட்டத்தின் நியாயத் தன்மையை இல்லாமல் செய்வதற்கு உலகம் திரண்டு கொண்டிருந்த நிலையில் அன்னை பூபதியின் தியாகம் அந்த நிகழ்ச்சி நிரலை முற்றாக உடைத்தது.

தியாகி திலீபன் அகிம்சை வழியில் போராடியிருந்தாலும் அவர் ஒரு போராளியாகவே கருதப்பட்டார்.

எங்களுடைய சமூகம் ஒட்டு மொத்தமாக அந்தப் போராட்டங்களின் பின்னால் நிற்கின்றது என்பதை உச்சக்கட்டமாக நிரூபித்துக் காட்டும் வகையில் இந்த அகிம்சைப் போராட்டங்கள் அமைந்துள்ளன.

தமிழ் அரசியலில் இருந்து தமிழ்த் தேசிய நீக்கத்தைச் செய்கின்ற அளவுக்கு அதனுடன் நெருக்கமாக இருந்த போராட்டத்தை இல்லாமல் செய்து, அதனுடன் தொடர்புபட்ட போராளிகள், பொது அமைப்புகள், மக்கள், அன்னை பூபதி போன்ற தியாகிகள் அனைவரும் எங்களுடைய மனதிலே இருந்து அழிக்கின்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்ற நிலையிலேயே தான் நாங்கள் முடிவு செய்கிறோம், நாங்கள் ஒரு அமைப்பாகவோ, தனிநபராகவோ இருக்கின்ற வரைக்கும் எங்களால் முடிந்தளவு இந்தத் தியாகங்களை உயிருடன் வைத்திருக்க வேண்டும் என்று முடிவு செய்கிறோம். எங்களுடைய விடுதலையை அடைய இது அசைக்க முடியாத நம்பிக்கையாக அமையும்- என்றார். (க-21)

## தேசிய மட்டத்திலான ஆங்கில போட்டியில் தமிழருக்கு முதலிடம்



யாழ்ப்பாணம், ஏப்.20

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கிய திறந்த போட்டியில் ஆங்கில இலக்கிய திறனாய்வுப் போட்டியில் அகில இலங்கையில் தமிழர் ஒருவர் முதலாம் இடத்தை பெற்றதுடன் ஆங்கில மொழிப் புலமை சார் ஆய்வுக் கட்டுரையில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

தமிழ் ஆங்கில எழுத்தாளரும், யாழ்ப்பாணக் கல்லூரி ஆங்கில இலக்கிய ஆசிரியரும், இளஞாயிறு சஞ்சிகை ஆங்கில ஆலோசகருமான மருத்துவர் வெற்றிவேல் சக்திவேல் சாதனை படைத்துள்ளார்.

இவர் கடந்த 37 வருடங்களாக எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருவதுடன் சிறுவர்கதை, சிறுகதை, கவிதை, பாடலாக்கம், ஆய்வுக்கட்டுரை, புலமை சார் கட்டுரை, இலக்கிய விமர்சனம், கட்டுரை போன்ற பல்வேறு துறைகளில் 48 இலக்கியப் பரிசுகளைப் பெற்றுள்ளார். (ஐ-50)

## சீரமைத்த அவசரசிகிச்சைப் பிரிவு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது

ஏழாலை, ஏப். 20

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் அமரர் பொது மருத்துவ நிபுணர் அம்பலவாணர் ரகுபதி ஞாபகார்த்தமாக சீரமைப்புச் செய்யப்பட்ட அவசர சத்திர சிகிச்சைப் பிரிவு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. லண்டன் 'அபயம்' அமைப்பின் நிதியுதவியுடன் அது சீரமைக்கப்பட்டதோடுஒரு தொகுதி உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் யோ.திவாகர்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ரகுபதியின் துணைவியார் வதனி மற்றும் பிள்ளைகள் இணைந்து அந்தப்பிரிவைத் திறந்து வைத்தனர். 'அபயம்' அமைப்பின் நிர்வாக உறுப்பினரும் ஆஸ்திரேலிய புற்று நோய் மருத்துவ நிபுணருமான மருத்துவர் திருமதி யசோதா சண்முகராஜா யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ. தேவநேசனிடம் உபகரணங்களை வழங்கினார்.


வைத்தியர் ரகுபதி தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் பணியாற்றியபோது, யாழ்ப்பாணப் போதனா மருத்துவமன்னைக்கு நிகரான அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்று தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் உருவாக்கப்பட வேண்டும் என்று லண்டன் 'அபயம்' அமைப்பினரிடம் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்ததன் பயனாக சுமார் 4 மில்லியன் ரூபா நிதியுதவியில் அவசர சிகிச்சைப் பிரிவு சீரமைப்புச் செய்யப்பட்டது.நிகழ்வில் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி , மருத்துவர்களான எம். உமாசங்கர், முரளி வல்லிபுரநாதன் மற்றும் மருத்துவர்கள், தாதிய அலுவலர்கள், நிர்வாக அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (கு)





சித்திரை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொதுச்சந்தையின் குபேர கணபதி ஆலயத்தில் நேற்று சிறப்பு வழிபாட்டுடன் சித்திரைக்கஞ்சி வார்க்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது பெருமளவு அடியார்கள் கலந்து கொண்டனர். (ஐ-9)





வல்வெட்டித்துறை அருள்மிகு சிறி முத்துமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. அம்மன் தேரேறி வருவதைப் பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் புடைசூழ்ந்திருந்தனர். (ஐ-173)



## ஈருருளி வழங்கல்

கொடிகாமம்,ஏப். 20

போரால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு ஈருருளி வழங்கப்பட்டது.

யேர்மனியில் இயங்கி வரும் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் ஊடாக யேர்மனியைச் சேர்ந்த விஜயகுமார் சாருகாவின் பிறந்தநாளை முன்னிட்டு இவ் உதவி வழங்கப்பட்டன.

பள்ளிக்குடா பூநகரியைச் சேர்ந்த சாரங்கா என்ற மாணவிக்கே இந்த உதவி அண்மையில் அமைப்பின் செயற்பாட்டாளர் கஜனால் வழங்கிவைக்கப்பட்டது. (ஐ-159)

# அதிக விளைச்சல் தரும் மாங்கன்றுகளை பயிரிட நடவடிக்கை

*யாழ்ப்பாணம்,ஏப்.20*

*யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிக விளைச்சலை பெறக் கூடிய மா இனத்தை பயிர் செய்வதற்கு அரச தலைவர் செயலகம் முன்வந்துள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.*

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: மாம்பழத்துக்கு யாழ்ப்பாண மாவட்டம் பெயர் பெற்ற இடமாக உள்ளது. மாம்பழ மரங்கள் வீட்டு வளவுகளில் காணப்படுகின்றனவேதவிர அதனை அதிகளவில் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றவாறு யாரும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதில்லை.

பன்னாட்டு சந்தையில் மாம்பழத்துக்கு தனியான இடம் உண்டு.

ஆனால் அதனை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற வகையில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதில்லை.

ஆகவே யாழ்ப்பாண மாவட்டத்தில் "ரொம் இஜெசி" மாமரக் கன்றுகளை நடுகை செய்வதற்கு அரச தலைவர் செயலகம் முன் வந்துள்ளது.

அதிக விளைச்சலை தரக்கூடிய இந்த மாமர இனத்தின் 500 கன்றுகள் முதலில் பயனாளிகளுக்கு வழங்க நடவடிகை எடுக்கப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்தக் கன்றுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப். 20

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை வலி. வடக்கு சவாரிவிடந்தையில் பிற்பகல் 1.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

4 பிரிவுகளாக இடம்பெறவுள்ள இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம்பெறும் வெற்றியாளர்களுக்கு தங்கப்பதக்கம் பரிசாகவழங்கப்படவுள்ளது. ஏனைய வெற்றியாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-7)

## சின்னம் சூட்டும் நிகழ்வு

கொடிகாமம், ஏப். 20

கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலை மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

# விற்பனை நிலையம் உடைத்து திருட்டு

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

சாவகச்சேரி, ஏப்.20

மீசாலையில் உள்ள பழமுதிர்சோலை விற்பனை நிலையத்தினுள் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த திருடர்கள் அங்கிருந்த பல பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர் எனச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இருமாடிக் கட்டடத்தின் கூரைத் தகட்டினை அகற்றி உள்ளிறங்கிய திருடர்கள் அங்கு பொருத்தப்பட்டிருந்த தட்டைத் தகடுகள் ( லெவல் சீற் )மற்றும் பாதுகாப்பு கம்பிவலை ஆகியவற்றையும் அப்புறப்படுத்தி உள்நுழைந்துள்ளனர். அங்குள்ள கண்ணாடிக் கதவினை உடைத்து உட்சென்று அங்கிருந்து பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பாக சங்க நிர்வாகிகள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நேற்று முறையிட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தரைப்பகுதி கட்டடத்தின் பல இடங்களில் குருதிக் கறைகள் காணப்படுவதால் கண்ணாடிக் கதவினை கையால் உடைத்ததில் உடைத்தவருக்கு கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9,159)



## எதை எடுத்தாலும் பத்து ரூபா!

### சிற்றுண்டி நிலையம் திறப்பு

சாவகச்சேரி, ஏப்.20

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் எந்த சிற்றுண்டியை எடுத்தாலும் 10 ரூபாவுக்கு விற்பனை செய்யும் சிற்றுண்டி நிலையம் நேற்று சங்கத் தலைமையகக் கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சங்க நிர்வாகத்தினர் மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் முன்னர் சிற்றுண்டி நிலையம் இயங்கிய கட்டடத்தில் சிற்றுண்டி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோரின் நலன்கருதி இங்கு சிற்றுண்டி வகைகள் 10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் விருந்தினராகக் கலந்து கொண்டு சிற்றுண்டி நிலையத்தை திறந்து வைத்தார். (ஐ-9)

## அபிவிருத்தி தொடர்பில் மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 20

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பான மக்கள் சந்திப்பு இன்று தொடக்கம் நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி திணைக்களத்தால் உள்ளூராட்சி சபைகளின் ஒவ்வொரு வட்டாரத்திலும் மக்களின் தெரிவின் பிரகாரம் வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு அறிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் முதலாம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாச்சிமார் கோவில் மண்டபத்திலும் , 2 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கலைவாணி சனசமூக நிலையத்திலும் , 3 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு முற்பகல் 10 மணிக்கு சைவப்பிரகாசா வித்தியாசாலையிலும் இடம்பெறவுள்ளது.

இதேபோன்று வட்டாரங்கள் முறையே 4 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு இன்று சனிக்கிழமை 4 மணிக்கு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்திலும் , 5 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதினம் திங்கட்கிழமை மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தில் 4 மணிக்கும் , 6 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு திருமகள் சனசமூகநிலையத்திலும் , 7 ஆம் வட்டாராத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதினம் திங்கட்கிழமை 4 மணிக்கு சிறி கலைமகள் சனசமூக நிலையத்திலும் , 8 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதினம் 9 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்திலும் , 9 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு 2 மணிக்கு ஜே 97 கிராம அலுவலர் அலுவலகத்திலும் , 10 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளை 4 மணிக்கு அறிவொளி சனசமூக நிலையத்திலும் இடம்பெறவுள்ளது.

இதேபோன்று 11 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சென் மேலிஸ் சனசமூக நிலையம் , 12 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு எதிர்வரும் 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஜே/84 கிராம அலுவலகர் அலுவலகத்திலும் இடம்பெறவுள்ளது.


இதேவேளை 13 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரியிலும் , 14 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு ,இன்று 3 மணிக்கு நாவலர் பாடசாலை மண்டபத்திலும் , 15 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதினம் 11 மணிக்கு ஜே78 கிராமஅலுவலகர் அலுவலகத்திலும், 16 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதினம் 5 மணிக்கு இளங்கதிர் சனசமூக நிலையத்திலும் , 17 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை 4 மணிக்கு அரியாலை சனசமூக நிலையத்திலும், 18ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதின்ம் காலை 9 மணிக்கு ஜே/62 கிராம அலுவலகர் அலுவலகத்திலும் , 19 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு 23 ஆம் திகதி மாலை 4 மணிக்கு பாசையூர் கடற்றொழிலாளர் சங்க கட்டடத்திலும் , 20 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு இன்று 3 மணிக்கு ஈச்சமோட்டை சனசமூக நிலையத்திலும் , 21 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு 23 ஆம் திகதி 4 மணிக்கு கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்திலும் 23 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதினம் மாலை 4மணிக்கு கார்மேல் மாதா கோவில் மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

இவ்வாறே 24 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளை 4 மணிக்கு ஓ எல் ஆர் தேவாலய மண்டபத்திலும் , 25 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு 24 ஆம் திகதி 3 மணிக்கு நமசிவாயம் பாடசாலையிலும் , 26ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளை 4 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்திலும், 27 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதினம் மாலை 4 மணிக்கு சென் றொக்ஸ் சனசமூக நிலையத்திலும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-105)

## கால்நடை, யானைகளால் ஏற்படும்
# பயிரழிவுகளைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுங்கள்
## விவசாயிகள் எம்.பியிடம் கோரிக்கை

மன்னார்,ஏப்.20

கால்நடை மற்றும் யானைகளால் பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்படுகின்றமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு புதுக்குடியிருப்பு விவசாயிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.





புதுக்குடியிருப்பு விவசாயி களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு விவசாய திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன் போது அப்பகுதி விவசாயிகள் காட்டு யானைகளாலும் திறந்துவிடப்படும் கால்நடைகளாலும் பாரிய பாதிப்புகளை எதிர்நோக்குவதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த நாடாளுமன்ற உறுப்பினர் யானை வேலி அமைப்பதில் சில நிர்வாக சிக்கல்கள் உள்ளன. தற்சமயம் பட்டாசுகளை பயன்படுத்துவது நல்லது.

கால்நடைகளை பொறுத்தமட்டில் அவைருக்கும் பொறுப்பும் பங்குகளும் உண்டு. கால்நடைகளை உரிமையாளர்கள் பகலில் மேய்த்து இரவில் அடைத்தாக வேண்டும் அதே போல் விவசாயிகள் தங்களது பயிர்களை காட்டு யானைகள் கால்நடைகள் சேதப்படுத்தாதவாறு பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்

முத்தையன்கட்டு குளத்தின் கீழ் கச்சல் கொடி கிளையாறு தண்ணீர் பிரச்சனை தீர்ப்பதற்காக இருபகுதியில் இருந்தும் தலா எட்டு நபர்கள் தெரிவு செய்யப்பட்டு நாளைமறுதினம் நடைபெற இருக்கும் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்வு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-213)

## மன்னிப்பு மலரட்டும்

### தவக்கால தியானங்கள்

குடும்பங்களில், அலுவலகங்களில் குழப்பங்கள் நிலவுவதற்கு அடிப்படைக் காரணம், ஒருவரையொருவர் மன்னியாதிருத்தல். எம்முடைய சுயம், மன்னிப்பின் பெரிய எதிரி. ஆனால், மன்னிப்பு என்பது ஒரு கொடை. அதன் நேர்மறை தாக்கத்தை உணர்ந்தவர்கள், அதை கைப்பற்றி, புனிதராகின்றனர். வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல், வானின் பனித்துளியும், நீரும் போல, மன்னிப்பும், குறிக்கோள் கொண்டது. தன்னை அடைந்தவரை மாமனிதராக்கும் தன்மை கொண்டது. இறையும், மனிதமும் சந்திக்கும் நிலைதான் மன்னிப்பு. உரக்க கத்தி கூச்சல்போட்டு ஒருவரை தாழ்த்துவதை விட, தாழ்ந்த குரலில், அவரை மன்னித்துப்பாருங்கள். நீங்கள் உயர்ந்த இடத்தில் வைக்கப்படுவீர்கள். இறைசாயலில் படைக்கப்பட்ட எமக்கு, நம் இறைத்தன்மையை வளர்த்தெடுக்கும் வாய்ப்பு, இந்த மன்னிப்பு. எமது செபத்தில் மன்னிக்கும் மனம் வேண்டுவோம். மன்னித்துவிடு என்பது மனிதம். மன்னித்துவிடுகிறேன் என்பது புனிதம்.

*நன்றி – வத்திக்கான் வானொலி*

## தொடருந்தில் இருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்த முல்லைத்தீவு இளைஞன்

முல்லைத்தீவு.ஏப்.20

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சின்னச்சாளம்பன் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த 17 ஆம் திகதி மாங்குளத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற தொடருந்தில் சென்றுள்ளார் குருநாகல் வெள்ளவாய பகுதியில் தொடருந்தில் இருந்து தவறிவீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

சின்னச்சாளம்பனைச் சேர்ந்த 17 அகவையுடைய விநாயகமூர்த்தி விதுசன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குருநாகல் பொலிஸாரின்சாவு விசாரணையினை தொடர்ந்து இளைஞனின் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க-ரி3)

## ஆளுநரின் 100ஆவது நாளில் பல செயற்றிட்டங்கள் நடந்தன

யாழ்ப்பாணம், ஏப். 20



வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆளுநராகப் பதவியேற்று நூறாவது நாளை முன்னிட்டு பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நூறாவது நாள் நிறைவடைவதை முன்னிட்டு யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரைப் பூங்காவில் நேற்றுக்காலை மரக்கன்றுகள் நட்டார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் இ.ஆனோல்ட், யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா.வேதநாயகன், யாழ்ப்பாண பிரதேச செயலர் சுதர்சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோப்பாய் நவமங்கை நிவாசத்தில் உரும்பிராய் லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்த இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வில் ஆளுநர் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 22 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்களை ஆளுநர் செயலகத்தில் வைத்து ஆளுநரே வழங்கினார். (து-7)

## கலந்துரையாடல்

முல்லைத்தீவு,ஏப்.20

மூன்றாவது ஆண்டில் தொடரும் வற்றா நதியின் சிறுவர்களுக்கான ஆங்கில கல்வி ஊக்குவிப்புத் திட்டம் வற்றாப்பளை, மகாவித்தியாலய மாணவர்களின் கல்வி வளர்ச்சி முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடனான கலந்துரையாடலை அமைப்பின் தலைவர் கனகசபை விமலதாஸ் மற்றும் நிறுவுனர் லக்கீஸ்வரன் ஆகியோர் கடந்த 15 ஆம் திகதி நடத்தினர். (க-222)



## புனைவின் அரசியல் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஏப். 20

சமூக வெளியின் புனைவின் அரசியல் 2 நிகழ்வு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள நூலக நிறுவனத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடக்கவுரையை கு.குமாரதேவன் நிகழ்த்துவார். சங்கிலியன் திரை தொடர்பில் அ.யேசுராசாவும் நடுகல் தொடர்பில் கை.சரவணனும் கானல் தேசம் தொடர்பில் சி.ரமேசும் போருதல் காதை தொடர்பில் தி.செல்வமனோகரனும் உரையாற்றுவார்கள். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும் என்று சமூகவெளி படிப்பு வட்டம் தெரிவித்தது. (த)

## கண் சத்திரசிகிச்சை நிபுணர் வவுனியாவில் கடமையேற்பு

வவுனியா, ஏப். 20

வவுனியா மருத்துவமனைக்குக் கண் சத்திரசிகிச்சை நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கடந்த புதன்கிழமை கடமையேற்றுள்ளார் என்று மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.

வெளிநாட்டில் சிறப்புப் பயிற்சியை நிறைவு செய்து கடந்தவாரம் நாடு திரும்பியிருந்த மருத்துவர் மு.ஞானரூபனே வவுனியா மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டார். கொழும்பு சுகாதார அமைச்சு இந்த நியமனத்தை வழங்கியது.

மருத்துவமனையில் அண்மைக்காலமாக குறித்த சிகிச்சை வழங்கும் மருத்துவ நிபுணர் இன்மையால் நோயாளிகள் கண் சிகிச்சைகளுக்காகத் தொலைதூரங்களுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கவனத்துக்குக் கொண்டுசென்றிருந்தார். அமைச்சரின் நேரடி உத்தரவுக்கிணங்க இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (த 110,214,222)

## மயிலிட்டி வடக்கு கலைமகள் சொந்த இடத்தில் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ்ப்பாணம் மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம், 28 வருடங்களின் பின்னர் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

அந்தப் பாடசாலையில் அதிபர் திருதி ரி.சண்முகானந்தம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு ஜூன் 18ஆம் திகதியிலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் இயங்கி இறுதியாக சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதி சுன்னாகம் தெற்கில் தற்காலிகமாக இயங்கிவந்தது.

கடந்த செப்ரெம்பர் 6ஆம் திகதி இந்தப் பாடசாலை இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது. பாடசாலையை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அதன்படி நாளை மறுதினம் தொடக்கம் சொந்த இடத்தில் இந்தப் பாடசாலை இயங்கவுள்ளது என்று அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (த)

# பறிமுதல் செய்யப்பட்ட மணலை பயனாளிகளுக்கு வழங்கவும்

## நீதிமன்றுக்குக் கோரிக்கை விடுக்குமாறு செயலர்களுக்கு பயனாளிகள் வேண்டுதல்

முல்லைத்தீவு, ஏப். 20

அனுமதியின்றி ஏற்றிச் சென்ற மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றை நீதிமன்றங்களிலிருந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்று, வீடுகட்டும் பயனாளிகளுக்கு வழங்க வேண்டும் என வலியுறுத்திய கடிதத்தை மாவட்டச் செயலர் அல்லது பிரதேச செயலர்கள் நீதிமன்றுக்கு அனுப்பி நோக்கத்தை நல்ல முறையில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வீட்டுத் திட்டத்தில் வீடுகள் கட்ட மணலின்றி அவதிப்படுவோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலக பிரிவின் கீழ் 2019 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்ட வேலைகள் வீட்டுத்திட்ட அமைப்புப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வீட்டுத்திட்டப் பயனாளிகள் கட்டுமானத்துக்குத் தேவையான மணலைப் பெற்றுக்கொள்வதில் பெரும் இடர்களை எதிர்நோக்கியுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்ட நடைமுறைகளுக்கு மாறாக மணல் ஏற்றுவோரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்துவர். சாரதிகளுக்கு தண்டம் விதிப்ப தோடு மணல் பறிமுதல் செய்யப்படுகிறது. பறிமுதல் செய்யப்படும் மணல் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் எதிர்வரும் 27 ஆம் திகதி பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது. இவற்றை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்று வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு நியாய விலையில் வழங்க வேண்டும். அல்லது வேறு ஏதாவது அரச நிறுவனங்கள் பொறுப்பெடுத்தாவது வழங்க வேண்டும். இந்தக் கோரிக்கை தொடர்பில் அரச தரப்பினர் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும் என்றும் வீட்டுத் திட்டப் பயனாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர். முல்லைத்தீவில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் மணல் பெறுவதில் இழுபறி நிலைகாணப்படுகிறது. இந்தநிலையை ஏனைய மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களும் செயற்படுத்துவது சிறப்பாக இருக்கும். அந்தந்த மாவட்டச் செயலர்கள் அல்லது பிரதேச செயலர்கள் இது பற்றிக் கவனம் செலுத்துவது சிறப்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-102)

## வாழ்வாதாரத்துக்கு வளர்த்த கிடாய் ஆடு திருட்டு போனது

முல்லைத்தீவு,ஏப்.20

முல்லைத்தீவு முள்ளியவளைப்பகுதியில் உள்ள குமாரபுரம் கிராமத்தில் போரால் பாதிக்கப்பட்டவரின் ஆட்டுப்பட்டியில் இருந்து 17 ஆம் திகதி இரவு. 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கிடாய் ஆட்டைக் களவாடிச்சென்றுள்ளதாகப் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் அவர்தெரிவிக்கையில்:

போரின் போது இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட நிலையில் கூலித்தொழில் செய்யமுடியாது கோழி, ஆடுகளை வளர்த்து அதில்வரும் வருமானத்தைக் கொண்டு எனது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்கின்றேன்.

இந்த நிலையில் கடந்த 17ஆம் திகதி இரவு 11 மணியளவில் நாய்கள் குரைத்து சத்தமிட்டதை தொடர்ந்து ஆட்டுப்பட்டிப் பக்கம் வெளிச்சம் பாய்ச்சிப் பார்த்தேன் அப்போது எனது ஆட்டு பட்டிக்குள் இருந்து அடையாளம் தெரிந்த நபர் ஒருவர் காணியை விட்டு வெளியேறுவதை அவதானித்தேன் என்னால் துரத்திப் பிடிக்கமுடியாத நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்தார். (க-ரி3)



## 40 மில்லியன் பெறுமதியில் அபிவிருத்தி வேலைகள்

மன்னார்,ஏப்.20

மன்னார் சாந்திபுரம் பகுதியில் உள்ளக வீதிகள் சீரமைப்புக்கு கிராம எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனால் 40 மில்லியன் பெறுமதியான இரண்டு உள்ளக கிரவல் வீதி அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சாந்திபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் 40 மில்லியன் ரூபாய்க்கான வேலைத் திட்டங்கள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் சாந்திபுர கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் , அபிவிருத்தி அலுவலர்கள் உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்த இரு வேலைத்திட்டங்களும் இரு மாத காலப்பகுதிக்குள் நிறைவு பெற்று மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56)

## இளங்கோ அடிகள் நினைவு நிகழ்வு

சித்திரை முழுநிலா தினமானநேற்று வவுனியா கோவில்குளம், சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள இளங்கோவடிகளாரின் சிலையடியில் அவரது நினைவுதினம் நினைவுகூரப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அடிகளாரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அடிகளார் தொடர்பான சிறப்புரைகளும் இடம்பெற்றிருந்தன. இந்த நிகழ்வில் உபநகரபிதா சு.குமாரசாமி, நகரசபை உறுப்பினர்களான, க.சந்திரகுலசிங்கம், நா.சேனாதிராஜா, செயலர் இ.தயாபரன்,தமிழருவி த. சிவகுமாரன், தமிழ்விருட்சம் அமைப்பின் சந்திரகுமார் சிவன் கோவில் நிர்வாகத்தினர், இந்து அன்பக சிறுவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-110)



## பெரிய வெள்ளியன்று மன்னார் பேராலயத்தில் சிலுவைப் பாதை

மன்னார்,ஏப்.20

கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மக்களால் கடைப்பிடிக்கப்படும் புனித வாரமாகிய பெரிய வெள்ளிக் கிழமை நேற்று மன்னார் மறை மாவட்டத்தின் பேராலயமான புனித செபஸ்தியார் ஆலயத்தில் பேராலய பங்குத் தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. சிலுவைப்பாதை யில் பக்தர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். (க-60)

## ஆன்மிக சுற்றுலா

கிளிநொச்சி, ஏப்.20

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசத்தில் உள்ள முட்கொம்பன் மற்றும் பள்ளிக்குடா முதியோர் சங்கங்களின் உறுப்பினர்கள் 50 பேர் நாளை திருகோணமலை மாவட்டத்துக்கு ஆன்மிக வழிபாடுக்காக அழைத்துச் செல்லப்படவுள்ளனர். திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படும் முதியோர்கள் திருக்கோணேச்சரம் சிறிலட்சுமி நாராயணர் கோவில், சிறிபத்தி ரகாளி அம்பாள் கோவில், கன்னியா வெந்நீருற்று ஆகிய திருத்தலங்களுக்கு அழைத்துச் சென்று வழிபட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் முதியோர் உளநல மேம்பாட்டுத் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினர், மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள முதி யோர்களை ஆன்மிக வழிபாட்டுக்காக மன்னார் அநுராதபுரம் திருகோண மலை போன்ற மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்றுவருவது குறிப்பிடத்தக்கது. (க - 9)

# முல்லைத்தீவில் சிறப்பாக இடம்பெற்ற தமிழ்,சிங்களப் புத்தாண்டு நிகழ்வுகள்

முல்லைத்தீவு, ஏப். 20

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புத்தாண்டு நிகழ்வுகள் முல்லைத்தீவில் இடம்பெற்றன.

முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்துகொண்டார். விருந்தினர் வரவேற்புடன் தொடங்கிய நிகழ்வில், பாரம்பரிய முறையில் ஆராத்தி எடுத்து, காவடி, கரகம், போன்ற நாட்டிய நடனங்களுடன் வரவேற்பு இடம்பெற்றது.



தொடர்ந்து விருந்தினர்கள் தமிழ் மக்களின் பாரம்பரியங்களை பறைசாற்றும் வகையில் அமைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களின் குடிலுக்கு அழைத்துச்செல்லப்பட்டு விருந்து வழங்கப்பட்டன. அதனையடுத்து சிங்கள மக்களுடைய பாரம்பரியங்களைக்கூறும் வகையில் அமைக்கப்பட்டிருந்த குடிலுக்கும் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டதுடன், விருந்தும் பரிமாறப்பட்டன.

தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்றன.,

நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் திருமதி மணிவண்ணன் உமாமகள், கரைதுறைப்பற்று மேலதிக பிரதேசசெயலர் இ.பிரதாபன், வடக்குமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-246)



# 59 நாள்களாகத் தொடரும் சிலாவத்துறை போராட்டம்

மன்னார் ,ஏப் .20

சிலாவத்துறை மக்களின் மண் மீட்புப் போராட்டம் 59 நாள்களாக தொடர்வதாகவும் இதுவரை எந்த தீர்வும் தரப்படவில்லை என்றும் சிலாவத்துறை மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் சிலாவத்துறைப் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் முகாம் அமைத்து தங்கியிருக்கும் கடற்படையினரை வெளியேறக் கோரி கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி சிலாவத்துறை மக்கள் கவன ஈர்ப்புப் பேரணி ஒன்றை நடத்திய தன்மூலம் தீர்வுகிடைக்கும் வரையான தொடர் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றார்கள். இன்று 59 ஆவது நாளாக நடைபெறுகிறது. அவர்களை சந்தித்து போராட்டம் தொடர்பாக கேட்ட பொழுது:

இன்றுடன் 59ஆவது நாளாக நடைபெறுகிறது. இந்த நாள் களுக்குள் மனித உரிமை ஆணைக்குழு உள்ளூர் மீனவர் அமைப்புகள் பிரதேச சபை உட்பட பல்வேறு அரசியல் தலைவர்கள் எம்மை சந்தித்து இருந்தார்கள் .

ஆனால்இதுவரைஎந்த ஒரு முன்னேற்ற கரமான செய்திகளும் எமக்கு கிடைக்கவில்லை.

அந்த வகையில் அரசியல் பிரமுகர்களின் முயற்சியால் சிலாவத்துறை மக்களுக்கும் அரசதலைவருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இந்த மாத இறுதிக்குள் நடைபெற உள்ளதாகவும் இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் முக்கியமாக கலந்து கொள்வார் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். (க-213)



## 500 பயன்தரு வாழைகளை அழித்தன காட்டு யானைகள்

வவுனியா,ஏப்.20

கனகராயன்குளத்தில் 500க்கும் மேற்பட்ட வாழை மரங்களை யானைகள் துவம்சம் செய்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா கனகராயன் குளம் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டுயானைகள் பயன்தரு மரங்களை சேதப்படுத்தி விட்டு சென்றுள்ளன.

வவுனியா வடக்கின் அனைத்துப் பகுதிகளிலும் நீண்ட காலமாக யானைகளின் தொல்லை இருந்து வருவதுடன், ஒவ்வொரு நாளும் இரவு வேளைகளில் குடிமனைக்குள் வந்து வாழை, தென்னை, பப்பாசி போன்ற வாழ்வாதாரப் பயிர்களை நாசமாக்கி விட்டு செல்வதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த இரு தினங்களில் கனகராயன்குளம் வடக்கு பகுதியில் உள்ள விவசாயிகளின் காணிகளுக்குள் புகுந்த காட்டுயானைகள் 500க்கும்மேற்பட்ட வாழை மரங்களை முற்றாக அழித்துச் சென்றுள்ளன.

குறித்த வாழைமரங்கள் சில நாள்களில் அறுவடைக்குத் தயாராகியிருந்த நிலையிலேயே யானைகளால் அழிக்கபட்டுள்ளதுடன், அதே காணியில் செய்கை பண்ணப்பட்டிருந்த பப்பாசிமரங்களையும் அடியோடு சேதமாக்கி விட்டுச்சென்றுள்ளன.

பிறிதொரு காணிக்குள் சென்ற யானைகள் அங்கு பயிரிடப்பட்டிருந்த 8 தென்னைமரங்களையும் அழித்துள்ளன.

வறட்சியான காலப்பகுதியிலும் பயிர்களைப் பாதுகாத்து வளர்த்து வந்ததுடன் அவை பயன்தரும் வேளைகளில் யானைகள் அட்டகாசம் செய்துவிட்டு போகும் நிலைமை நீடித்துவருவதாக கவலை தெரிவிக்கும் அந்தப் பகுதி மக்கள்.இதனால் தமது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கனரகவாகனங்களில்ஏற்றி வரப்படும் யானைகள் வவுனியா வடக்கு பகுதிகளில் இறக்கிவிடப்படும் செயற்பாடுகளை நேரடியாக அவதானிப்பதாகவும் இந்தச் செயற்பாடு நீண்டகாலமாக இடம்பெற்று வருவதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

வன்னியை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் குரல்கொடுத்து யானை பாதுகாப்பு வேலிகள் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இல்லை எனில்தோட்டசெய்கையை கைவிட்டுவிட்டு தொழில் தேடி மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்லவேண்டிய நிலைக்கு தாம்தள்ளப்படும் சூழல் உருவாகிவிடும் என்று கவலை தெரிவிக்கின்றனர். (க-110)

## அதிக வேகம் காரணமாக பேருந்து குடைசாய்ந்தது

### ஒருவர் காயம்

வவுனியா,ஏப்.20

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லைத்தீவு - முறிகண்டி செல்வபுரம் பகுதியில் நேற்று அதிகாலை பதுளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த அரச பேருந்து விபத்துக் குள்ளானது.இதில் ஒருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அதிக வேகம் காரணமாக குறித்த பேருந்து பாதையைவிட்டு விலகி ஏ-9 வீதியில் அமைந்துள்ள கனகாம்பிகை குளத்துக்குள் குடைசாய்ந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-222,214-35)






## இரணைதீவு மக்கள் மீள்குடியேற்றம்

### மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை

மன்னார்,ஏப்.20

இரணைதீவு மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் இயக்குநர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

இரணைதீவு மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக இரணைதீவு மக்கள் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தனர்.

இரணைதீவு மக்களின் வாழ்வியல் பிரச்சினை தொடர்பாக தொடர்ச்சியாக ஊடகங்களிலும் செய்திகள் வெளிவந்துள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் சி. கனகராஜ் தலைமையில் மனித உரிமை ஆணைக்குழுவினர் கடந்த மாதம் திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டு இரணைதீவுக்குச் சென்றனர். பயணத்தின் போது இரணைதீவு மக்களுடன் இதுவரை மீள்குடி யேற்றத்தின் பின்னர் பூர்த்தியாக்கப்பட்ட, பூர்த்தி யாக்கப்படாத விடயங்கள் தொடர்பாக நேரடியாக கலந்துரையாடியுள்ளனர்.

இரணைதீவு மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக மக்களால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை ஒன்றை எதிர் வரும் மே மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பூநகரி பிரதேச செயலர் , கிளிநொச்சி மாவட்டச் செயலர், மீள்குடியேற்ற மறுவாழ்வு வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

என மன்னார் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் இயக்குநர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார். (க-56)

# விவசாயத்துக்கு அரச காணிகளை பகிர்ந்தளிக்குமாறு வேண்டுகோள்

மன்னார்.ஏப்.20

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேசசெயலகப்பிரிவிலுள்ள சன்னார் மற்றும் ஈச்சளவக்கை மக்களின் வாழ்வாதாரம் உப உணவுப்பொருள்கள் மற்றும் விவசாய செய்கை பண்ணுதலைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு அரச காணிகள் வழங்கப்படும் என தெரி விக்கப்பட்டிருந்தும் அரசியல், அதிகாரிகளின் துணையுடன் மாற்றாருக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதையிட்டு பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்கள் நீதிகோரி இலங்கைமனித உரிமைகள் ஆணைக்குழு மன்னார் மாவட்ட அலுவலகத்தில் முறையீடு செய்துள்ளனர்.

மன்னார் மாந்தை மேற்கு பகுதியிலுள்ள சன்னார் மற்றும் ஈச்சளவக்கை மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மன்னார் மாவட்ட அலுவலகத்தில் செய்துள்ள முறையீட்டில் தெரிவித்திருப்பதாவது:

சன்னார் பகுதி மக்கள் அரை ஏக்கர் வீட்டுக் காணிகளிலும், ஈச்சளவக்கை மக்கள் ஒரு ஏக்கர் வீட்டுக் காணிகளிலும் வசித்து வருகின்றோம்.

இந்தப் பகுதியிலுள்ள மக்களாகிய நாங்கள் விவசாய குடும்பங்களைச் சார்ந்தவர்களாக இருப்பதால் வீட்டுக் காணிகளைத் தவிர விவசாயம் செய்யக்கூடிய எந்தவித காணிகளும் எங்களுக்குக் கிடையாது.

நாங்கள் இப் பகுதியில் மீள்குடியேற்றப்படும்போது ஈச்சளவக்கை மக்களுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் வீட்டுக் காணிகளும், சன்னார் பகுதி மக்கள் மீள்குடியேற்றப்படும்போது ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு ஏக்கர் வீதம் காணி தரப்படும் என தெரிவிக்கப்பட்டபோதும் இவர்களுக்கு தலா அரை ஏக்கர் காணிகளே வழங்கியுள்ளனர்.

ஒரு சிலர் பிரபல அரசியல் பிரமுகரின் துணையுடனும் பிரதேச செயலரின் எழுத்து மூலத்துடன் போலியான உறுதிகளை தயார்படுத்தி ஆளுகை செய்ய முற்படும்போது அவைகள் எங்களால் தடுத்து நிறுத் தப்பட்டு வருகின்றன.

ஆகவே அரச காணியின் பிணக்கைத் தீர்த்து எங்களுக்கு காணியைப் பகிர்ந்தளித்து எமக்கு வாழ வழி காட்டுமாறு தங்களது முறையீட்டில் தெரிவித்துள்ளனர். (க-60)

# ரூ.25 ஆயிரம் தண்டத்தில் திருத்தத்துக்கு இணக்கம்

கொழும்பு, ஏப். 20

வாகனங்களை இடது பக்கமாக முந்திச் செல்வதற்காக அறவிடப்படும் 25 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திகள் சேவைகள் இராஜாங்க அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கிடைத்துள்ள வேண்டுகோளைக் கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதற்கான அரசிதழை நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பித்து, கட்டணத்தைக் குறைப்பதற்கான திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அசோக் அபேசிங்க குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், ஏனைய வீதி ஒழுங்கு மீறல்களுக்காக விதிக்கப்படும் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணத்தில் எவ்வித மாற்றமும் இடம்பெறாது எனவும் இராஜாங்க அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார். (ஒ.5)



## ஐ.ம.சு.முன்னணி எவருக்குமே அமைச்சுப் பதவி கிடைக்காது

### அரசதலைவர் வழங்கவேமாட்டார் என்று சு.கவின் மூத்த தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 20

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்குமே அமைச்சர் பதவிகளை வழங்கமாட்டார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசு அமைக்கும் பேச்சுக்கே இடமில்லை. எந்தவொரு சூழ்நிலையிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அமைச்சர் பதவிகளை அரசதலைவர் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கமாட்டார்.

அத்துடன், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு உள்நாட்டு விவகார அமைச்சர் பதவியை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை கோரியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சரத் பொன்சேகாவுக்கு அமைச்சர் பதவியை வழங்க அரசதலைவர் மறுத்து வரும் நிலையில், அவருக்கு இந்தப் பதவி வழங்கப்படாது என்றும் அவர் கூறியுள்ளார். (த)

## தரமுயர்வதைத் தடுப்பதை முஸ்லிம்கள் கைவிடவும்

### தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கோரிக்கை

மட்டக்களப்பு, ஏப். 20

1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் திட்டமிட்டு தட்டிக்கழிக்கப்படுவதை ஏற்கமுடியாது. இதே போன்ற 25 உப செயலகங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. தற்போது கல்முனை வடக்கு தமிழ் பிரதேச உப செயலகம் தவிர்ந்த அனைத்தும் தரமுயர்த்தப்பட்டு விட்டன. கல்முனை வடக்கு தமிழ் பிரதேச உபசெயலகம் தரமுயர்த்தப்படாமல் இருப்பது துரதிஷ்ட்டவசமானது.

இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலர் பூ.பிரசாந்தன் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் - முஸ்லிம் என்கின்ற இனவாத அரசியல் போட்டிகளில் சிக்குண்டு இந்தச் செயலகம் தரமுயர்த்தப்படுவது சாத்தியமாகாமலேயே சென்று கொண்டிருக்கின்றது. மிக இலகுவாக செயற்படுத்தக்கூடிய இந்த தரமுயர்த்தல் நடவடிக்கைகள் இன்று பெரும் சவால் நிறைந்த விடயமாக மாறுவதற்குத் தமிழ் மக்களின் பெரும்பான்மையோரைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தலைமைகளின் பொறுப்பற்ற தன்மையே காரணம்.

இந்த உப செயலகமானது தமிழர்களுக்கானது என்றும் அதனை தரமுயர்த்துகையில் முஸ்லிம்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் பொய்ப் பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அத்தகைய பரப்புரைகளில் கிஞ்சித்தேனும் உண்மை கிடையாது - என்றுள்ளது. (த)

## அரசதலைவர் வேட்பாளர் தெரிவில் ஐ.தே.கவுக்குள் நெருக்கடி தீவிரம்

கொழும்பு, ஏப். 20

அரசதலைவர் வேட்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியாது, ஐக்கிய தேசிய கட்சிக்குள் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில், அமைச்சர்களான சஜித் பிரேமதாச மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு இடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் கட்சிக்குள்ளேயே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்பதை தெளிவாகக் காட்டுகின்றன என்றார். (த)

## எத்தனை வேட்பாளர்கள் வந்தாலும் புத்திசாலிகள் நல்ல தீர்மானம் எடுப்பர்

### மகிந்த ராஜபக்ச கூறுகிறார்

கொழும்பு, ஏப். 20



எத்தனை வேட்பாளர்கள் வந்தாலும், புத்திசாலித்தனமான மக்கள் புத்திசாலித்தனமான தீர்மானம் ஒன்றை மேற்கொள்வார்கள். எந்தத் தேர்தல் வந்தாலும் அதை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம்.

இவ்வாறு முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்சவும் அவரது பாரியாரும் நுவரெலியா சீதாஎலிய சிறி முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்று வழிபாடு செய்தனர். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் நாங்கள் வெற்றிபெறக்கூடிய நபரையே வேட்பாளராகக் களமிறக்குவோம். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கட்சித் தாவல் தொடர்பில் ஒரு சூழ்ச்சி இடம்பெற்றதாக அறியமுடிகின்றது. அது அவர்களுக்குள் ஏற்பட்ட சூழ்ச்சி. அது வெளியாகிய நிலையில் அந்த விடயம் கைவிடப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. நாங்கள் எதனையும் செய்யவில்லை. அது அவர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினை.

நாங்கள் மக்களை நம்புகின்றோம். புதுவருடத்தில் மக்களுக்கு குளிப்பதற்கு தண்ணீர் இல்லை. மின்சாரம் இல்லை. இந்த மக்களுக்கு ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொடுக்க இவர்களால் முடியவில்லை. எங்கள் காலத்தில் கேட்ட சம்பளத்தைக் கொடுத்தோம். அரசு என்ற வகையில் ஆயிரம் ரூபாவை வழங்குமாறு தோட்ட நிறுவனங்களிடம் வலியுறுத்த வேண்டும். அரசு அதனைச் செய்ய முடியவில்லையெனின், எதைத்தான் அரசால் செய்ய முடிகிறது?

நுவரெலியா மருத்துவமனையை இன்னமும் திறந்து வைக்க முடியாமல் உள்ளது. நான் அமைத்துக்கொடுத்ததை திறக்க அவர்களால் முடியவில்லை. ஹம்பாந்தோட்டை மருத்துவமனையிலும் அதே நிலமையே காணப்படுகின்றது.

எதிர்வரும் காலத்தில் மாகாண சபைத் தேர்தலே நடைபெற வேண்டும். எனினும் அரசதலைவர் தேர்தலே நடைபெறுமென்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது. நாடாளுமன்றத் தேர்தல் அதன் பின்னரே நடைபெற வேண்டும். ஏதாவது ஒரு தேர்தல் நடைபெற வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு. உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் தீர்ப்பு விளங்கியது தானே! - என்றார்.

ஆலய தேர்த் திருவிழாவை முன்னிட்டு ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவரும் அமைச்சருமான வீ. இராதாகிருஷ்ணனின் அழைப்புக்கிணங்க மகிந்த அங்கு சென்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அவருடன் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி. ரத்நாயக்கவும் சென்றிருந்தார். (த)

## 2007 - 2016 காலப்பகுதியில் 3 லட்சத்து 66,000 விபத்துக்கள் 25,607 பேர் உயிரிழந்துள்ளனர்

### வீதிப் பொறியியல் தொடர்பான தவறுகள் திருத்தப்ப்டாமையே காரணம் என்கிறது ஆய்வு

கொழும்பு, ஏப். 20

இலங்கையில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 3 இலட்சத்து 65 ஆயிரத்து 925 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. 25 ஆயிரத்து 607 பேர் உயிரிழந்துள்ளனர். அதிக வீதி விபத்துக்களுக்கு உந்துருளிகளே காரணம் என்று கணக்காளர் நாயகத்தின் அறிக்கை சுட்டிக்காட்டி யுள்ளது.

உந்துருளிகளுக்கு அடுத்த கட்டத்தில் முச்சக்கர வண்டிகள், லொறிகள், தனியார் பேருந்துகள், வான்கள் மற்றும் மகிழுந்துகள் காரணமாகவுள்ளன என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'இலங்கையில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான அரச தரப்பினரின் செயற்பாடுகள்' என்ற கணக்காளர் நாயகத்தின் அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

வீதிப் பொறியியல் தொடர்பான தவறுகள் திருத்தப்படாமையே வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணம் என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நாடு முழுவதுமுள்ள பொலிஸ் பிரிவுகளிலிருந்து கிடைத்த தகவல்களை பகுப்பாய்வு செய்து தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையின்படி, பேருந்து தரிப்பிடங்களுக்கு அருகில் பாதசாரிகள் கடவைகள் அமைக்கப்பட்டுள்ளமை, பாதசாரிகள் கடவைகள் சரியாக இனங்காட்டப்படாமை, சில இடங்களில் பாதசாரிக் கடவைகள் புதிதாக வர்ணம் பூசப்படாமை, வீதிகளுக்கு இடையூறு செய்யும் வகையில் மின்சார மற்றும் தொலைபேசி தூண்கள் இருத்தல், வீதிகளுக்குப் போதிய வெளிச்சம் இல்லாமை, வீதி விளக்குகள் முறையாக செயற்படாமை ஆகியவையே குறிப்பிடத்தக்க அளவு வீதி விபத்துக்களை ஏற்படுத்தியுள்ளன என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

## இலங்கைத் தேயிலை உற்பத்தி 2050 ஆம்ஆண்டு பாதிக்கப்படும்

### ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது

கொழும்பு, ஏப். 20

காலநிலை மாற்றத்தால் 2050ஆண்டில் இலங்கைத் தேயிலை உற்பத்திக்கு ஏதுவான நிலத்தன்மையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஆய்வு அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேயிலை உற்பத்திக்கு ஏதுவான நிலத்தன்மையை இலங்கை கொண்டிருப்பதானால், இலங்கையின் முதன்மையான பெருந்தோட்டக் கைத்தொழில் துறையாக தற்போது தேயிலை தொழிற்றுறை நிலவுகிறது.

எனினும் பூகோள காலநிலை மாற்றத்தின் விளைவால், 2050 ஆண்டு தொடக்கம் 2070ஆம் ஆண்டு வரை இந்த நிலமையில் பாதகமான மாற்றம் ஏற்படும்.

இந்தக் காலப்பகுதியில் இலங்கையில் தேயிலை உற்பத்திக்கு அதிக சாதகமான தன்மை கொண்ட நிலத்தின் அளவு 10.5 சதவீதமாக குறைவடைவதுடன், நடுத்தர சாதகமான தன்மையைக் கொண்ட நிலத்தின் அளவு 17 சதவீதமாகவும், ஓரளவுக்கு தேயிலை உற்பத்திக்கு ஒத்துழைக்கும் நிலத்தின் அளவு 8 சதவீதமாகவும் குறைவ டையும் என்று ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# திருமலையில் 27ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம்

## சகலரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு

மூதூர், ஏப். 20

**தி**ருகோணமலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தவுள்ளனர். இதற்கு ஆதரவளித்து சகலரையும் இணைத்துக் கொள்ளுமாறு சங்கம் கோரியுள்ளது.

திருகோணமலை கடற்கரை முன்றலில் அமைந்துள்ள காந்தி சிலை அருகில் சகலரும் ஒன்றுகூடி அங்கிருந்து திருகோணமலை கடற்படைத்தளவீதி, தபால் கந்தோர் வீதி, மின்சார நிலைய வீதி வழியாக ஊர்வலமாகச் சென்று மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் மனுக் கையளிக்க உள்ளனர்.

போராட்டத்தில் இன, மத பேதம் இன்றி சகலரையும் ஒன்றிணையுமாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது உறவுகளை மீள ஒப்படைக்குமாறு கோரியும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய உண்மைகளை வெளிப்படுத்துமாறும் கோரியும் வருடங்கள் கடந்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(த-40)

## கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக விவகாரம் போராட்டத்துக்கு நீதிமன்று தடை உத்தரவு

அம்பாறை, ஏப். 20

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தக் கோரி அங்கு இடம்பெற இருந்த போராட்டத்துக்கு கல்முனை நீதிவான் மன்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கல்முனைப் பிரதேசத்தில் உள்ள தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு தமிழர்களை ஒன்றிணைய வேண்டும் என்று கல்முனை எங்கும் துண்டுப் பிரசுரங் களை தமிழ் உணர்வாளர்கள் ஒன்றியத்தினர் ஒட்டியிருந்தனர். அதனூடாக போராட்டத்தையும் ஒழுங்கு செய்திருந்தனர். அந்தப் போராட்டம் நாளை மற்றும் நாளை மறுநாள் என இரண்டு நாள்கள் பேரணியாக இடம்பெற ஏற்பாடாகியிருந்தது. தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மட்டுநகரில் இருந்து அம்பாறை மாவட்டச் செயலகம் வரை நடைபவனியாகச் செல்வது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தப் போராட்டத்தை நடத்தக் கூடாது என்று பொலிஸாரால் நீதிமன்றில் கோரப்பட்ட தடை உத்தரவை அடுத்து மன்று அதற்கான உத்தரவை மன்று வழங்கியுள்ளது. கடந்த 17ஆம் திகதி எழுத்து மூலம் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி வரை கல்முனை நீதிவான் எல்லைக்குட்பட்ட மக்கள் நடமாடும் இடங்களில், பொது இடங்களில் ஒன்றுகூடக் கூடாது, பொதுச் சொத்துக்கோ, மனித உடமைக்கோ, உயிருக்கோ சேதம் ஏற்படும் வகையில் ஒன்று கூடக்கூடாது, அகில இலங்கை சோசலிசக் குடியரசின் பற்றின்மையை போக்கக் கூடிய தவறான துண்டறிக்கைகளை, அல்லது பதாகைகளை வெளியிடவோ, பிரசுரிக்கவோ கூடாது என்று மன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கல்முனையில் இரண்டு பிரதேச செயலகங்கள் உள்ளன. கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகம், கல்முனை தமிழ் பிரதேச செயலகம் என்றுள்ளன. கல்முனையில் பிரதான பிரதேச செயலகமாக கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகமே உள்ளது. அங்கேயே காணி, நிதி விவகாரங்கள் கையாளப்படுகின்றது. கல்முனை தமிழ் பிரதேச செயலகம் உப பிரதேச செயலகமாகவே உள்ளது. அதிக தமிழர்கள் இருந்தபோதும், அந்தப் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படவில்லை. காணி, நிதி கையாளுகைகள் தமிழ் பிரதேச செயலகத்தில் இடம்பெறவேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்தே அந்தப் போரட்டம் ஏற்பாடாகியிருந்தது.

இந்தப் போராட்டத்தில் தானும் பங்கேற்கின்றேன் எனத் தெரிவித்து மக்களை அணி திரளுமாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறைகூவல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யானைகளால் பயிரினங்கள் நாசம்

மூதூர்.ஏப்.20

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட உப்புக் காச்சிமடு மற்றும் இறால் குழி பகுதிகளில் ஆற்றைக் கடந்து வரும் யானைகளால் கிராமத்தில் செய்கை பண்ணப்பட்ட பயிரினங்கள் பெருமளவில் அழிவுக்குள்ளாகி வருகின்றன என்று கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மக்கள் மீள்குடியேற்றப்பட்ட இந்தக் கிராமங்களில் பெரும்பாலான தோட்ட செய்கையாளர்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் நிலக்கடலை, எள்ளு, பயறு, வாழை, தென்னை போன்ற வருவாய் பெறக் கூடிய பயிரினங்களை நட்டுள்ளனர்.

தற்போது பருவமழை கிடைக்காத நிலையிலும் இந்தப் பயிரினங்களுக்காக தண்ணீர் இறைத்து பராமரித்து வருகின்ற நிலையில், இறால்குழி, ஓட்டுமடம், நன்னி மற்றும் பண்வெட்டான் போன்ற காட்டுப்பகுதியில் இருந்து இரவில் ஆற்றைக்கடந்து வரும் யானைகள் இந்தப் பயிரினங்களை அழித்து வருகின்றன என்று தோட்ட செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(க-40)

## அமெரிக்கக் கப்பல்கள் இலங்கை வந்துள்ளன



கொழும்பு, ஏப். 20

அமெரிக்கக் கடற்படையின் நாசகாரி போர்க் கப்பல் ஒன்றும், போக்குவரத்துக் கப்பல் ஒன்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நேற்று வந்தடைந்துள்ளன.

இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து, கரட் - 2019 எனப்படும், "கப்பல் தயார்நிலை மற்றும் பயிற்சி ஒத்துழைப்பு" என்ற கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவதற்காக அவை இலங்கைக்கு வந்துள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் அமெரிக்க கப்பல்களை இலங்கைக் கடற்படை அதிகாரிகளும், அமெரிக்க தூதரகத்தில் உள்ள பாதுகாப்பு ஆலோசகர்களில் ஒருவரான லெப். கொமாண்டர் பிறயன் பட்ஜ் ஆகியோர் வரவேற்றனர்.

இலங்கைக் கடற்படையின் சயுரால மற்றும் சமுத்ர ஆகிய போர்க்கப்பல்களுடன் இணைந்து அமெரிக்க போர்க்கப்பல்கள், கரையோர மற்றும் ஆழ்கடல் பயிற்சிகள் என, இரண்டு கட்டங்களாக கூட்டுப் பயிற்சியில் ஈடுபடவுள்ளன.

கூட்டுப் பயிற்சியின் அடிப்படை நோக்கம், கடல்சார் பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவதாகும். சிறிய படகுகளை கையாளுதல், சுழியோடும் பயிற்சிகள், தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை, சமூக நலன்புரி செயற்பாடுகள், விளையாட்டு போன்றவற்றின் மூலம், இருதரப்பு ஒத்துழைப்பு பலப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள இரண்டும் ஆகப் பிந்திய தொழில்நுட்பங்களைக் கொண்ட அதி நவீன போர்க்கப்பல்கள் என்று கடற்படை தெரிவித்தது. (கு)

## பாடகர் நதிமால் பெரேரா மீது கொலைச்சதி விசாரணை

கொழும்பு, ஏப். 20

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச கொலைச் சதி முயற்சி தொடர்பில் பிரபல பாடகர் அமல் பெரேராவின் புதல்வரும், பாடகருமான நதிமால் பெரேராவிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

அண்மையில் டுபாயில் பிரபல பாதாள உலகக்குழுத் தலைவர் ம்ாக்கந்துரே மதூஷ் வழங்கிய விருந்து பசாரத்தில் பங்கேற்றிருந்த நதிமால் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அரசதலைவர் கொலைச் சதி முயற்சி குறித்து விசாரணை நடத்தும் புலனாய்வுப் பிரிவினர் நேற்றைய தினம் நதிமாலிடம் விசாரணை நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவுடன் அமல் மற்றும் நதிமால் ஆகியோர் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணினர் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (கு)

## சூதாடினர் என்ற குற்றச்சாட்டில் பணம், காட்களுடன் மூவர் கைது

கொழும்பு, ஏப். 20

பண சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சூதாட்டத்துக்குப் பயன்படுத்திய "காட்" கட்டுக்களும் பணமும் மீட்கப்பட்டுள்ளன.

தமக்குக் கிடைத்த தகவலின்படி அங்கு சென்று கைது செய்தோம் என்று ஹாலிஎலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலிஎலை புற நகர்ப்பகுதியில் வீடொன்றில் சூதாட்டம் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

சூதாட்டத்துக்குப் பயன்படுத்திய 4ஆயிரத்து 300 ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது.

கைதானவர்கள் பதுளை நீதிமன்ற நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(கு)

## 349 சங்குகளை கடத்தினாரென ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 20

சிலாவத்துறையில் சட்டவிரோதமாக 349 சங்குகளைக் கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். சிலாவத்துறை - கொக்குப்படையான் பகுதியில் நேற்றுமுன்தினம் நடத்திய சுற்றிவளைப்பின்போது கெப் வண்டியொன்றில் சங்குகளைக் கொண்டு சென்றபோது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (கு)

## ரூ.35 மில்லியன் பெறுமதியான ஹெரோய்ன் மீட்கப்பட்டது

கொழும்பு, ஏப். 20

வாகன திருத்தும் நிலையத்தில் 3 கிலோ 600 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குருந்துகஹ ஹெதப்ம பகுதியில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு நேற்றுமுன்தினம் நடத்திய திடீர் சோதனையில் அது சிக்கியது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்டுள்ள போதைப்பொருளின் பெறுமதி சுமார் 35 மில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எவரும் கைதாகவில்லை. விசாரணை இடம்பெறுகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(கு)

## தொடருந்து மோதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 20

ஜாஎல, துடெல்ல தொடருந்து பாதுகாப்பற்ற கடவையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சிலாபத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி வந்த தொடருந்துடன் உந்துருளி மோதியுள்ளது. ஜாஎல, துடெல்ல பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். (கு)

# இலங்கையில் முடியாததால்தான் பன்னாடுகளில் முயற்சிக்கின்றனர்

## மகிந்த அணி விஜயசேகர எம்.பி. தெரிவிக்கிறார்

கொழும்பு, ஏப். 20

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு உள்நாட்டு நீதிமன்றங்களில் தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில்தான், அவரை திட்டமிட்டு தண்டனைக்குட்படுத்துவதை இலக்கு வைத்து வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் பன்னாட்டு அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்று ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவில் அவருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன. இதன் பின்னணியில் அமைச்சர் மங்கள சமரவீரவே உள்ளார்.

எமக்கு ஒரு புகைப்படம் கிடைத்துள்ளது. கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தவர்களில் ஒருவரான ரோய் மனோஜ்குமார் என்பவர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவுடன் இணைந்திருந்து ஒளிப்படம் எடுத்துள்ளார். புலிகளுடன் தொடர்புடைய ரோய் மனோஜ்குமாருடன் நாட்டில் முக்கிய பதவி வகித்த பீல்ட் மார்ஷல் ஏன் ஒளிப்படம் எடுத்தார் என்ற கேள்வி எமக்குள் இருக்கின்றது. இவர் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி. வி. விக்கினேஸ்வரனுடனும் இணைந்து எடுத்த ஒளிப்படம் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. ரோய் மனோஜ்குமார் விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்டமைக்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அனைத்துக் குற்றங்களையும் ஏற்றுக்கொண்டதால் 2007ஆம் ஆண்டு நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். இத்தகையவர்கள் என்ன காரணத்துக்காக 2019ஆம் ஆண்டு நாட்டை மீட்டெடுத்த கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்கின்றார்கள் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள முடியும் - என்றார். (த-61)



# பழையவர்கள் புதியவர்கள் பாகுபாடு என்னிடமில்லை

## அமைச்சர் திகாம்பரம் கூறுகிறார்

பொகவந்தலாவ, ஏப். 20

என்னை நம்பி தொழிற்சங்கத்துக்கு வரும் மாற்றுத் தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்களை அரவணைத்தே செயற்படுவேன், மாறாக பழையவர்கள் புதியவர்கள் என்ற வார்த்தைக்கு இடமில்லையென மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளர் தேசிய முன்னணியின் முக்கியஸ்தர்களுடன் நோர்வூட் விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரையில் கட்சிபேதம் பார்த்து அபிவிருத்தி செய்யவில்லை. ஆனாலும் கட்சி ரீதியில் பணிகள் செய்வதாகக்கூறித்திரிபவர்களைக் கண்டு கொள்வதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

# அரசதலைவர் தேர்தலின் வெற்றி ஐ.தே.கவுக்குச் சாதகமாகவுள்ளது

## மகிந்த, மைத்திரி அணிக்குத் திண்டாட்டமே கூறுகிறது இலங்கை சமசமாஜக் கட்சி

கொழும்பு, ஏப். 20

இலங்கையின் தற்போதைய சூழலில், அடுத்த அரசதலைவர் தேர்தல் ஐக்கிய தேசியக் கட்சிக்கே சாதகமாகக் காணப்படுகிறது என்று இலங்கை சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

அத்தோடு ஐக்கிய தேசிய கட்சியின் அரசதலைவர் வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸவை களமிறக்குவதே சரியானதாகவிருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்தத் தேர்தலுக்கு யாரை வேட்பாளராகக் களமிறக்கலாம் என்பது குறித்தே அனைத்துக் கட்சிகளும் ஆலோசித்து வருகின்றன.

மகிந்த அணியினர், போரை வெற்றிகொண்டமை மற்றும் பௌத்த மதத்தை முன்னிலைப் படுத்தியே இந்தத் தேர்தலில் களமிறங்கக் காத்திருக்கின்றனர்.

இது எவ்வளவு தூரத்துக்குச் சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. சிங்கள மக்கள் 70 வீதமானோர் நாட்டில் இருந்தாலும், 5 வீதமானோர் கிறிஸ்தவர்களாகவே உள்ளார்கள். இதனால், எஞ்சியுள்ள 65 வீதமானோரில் 50 வீதத்துக்கும் குறைவான வாக்குகளே மகிந்த தரப்பினருக்குக் கிடைக்கும்.

எம்மைப் பொறுத்தவரை சஜித்தை வேட்பாளராக களமிறக்குவதுதான் சரியாக இருக்கும். தற்போதைய சூழலுக்கு இணங்க ஐக்கிய தேசியக் கட்சிக்கே, அரசதலைவர் தேர்தல் சாதகமாக இருக்கும். எனவே, இந்தத் தேர்தலில் இனவாதத்துக்கு இடமிருக்காது என்றே நாம் கருதுகிறோம் - என்றார். (த)

# இராணுவ பொலிஸ் சாவு வாகன சாரதிக்கு மறியல்

முல்லைத்தீவு, ஏப். 20

இராணுவப் பொலிஸ் அலுவலர் விபத்தில் உயிரிழந்த நிலையில், விபத்துடன் தொடர்புடைய வாகன சாரதியை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவிட்டது.

முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளை படை சோதனைச் சாவடியில் கடமையின் நிமித்தம் இருந்தபோது கடந்த 17 ஆம் திகதி விபத்து இடம்பெற்றிருந்தது. அந்த அலுவலர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொரு படைச் சிப்பாய் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

முள்ளியவளை குமாரபுரத்தைச் சேர்ந்த 41 வயதுடையவரே முள்ளியவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அதன்போதே விளக்க மறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (த.ரி-3)

# இலங்கை தமிழ் மக்களுக்கான குரல் பயனற்றுபோவது கவலையளிக்கின்றது

## இந்தியப் பாடகி சிறிநிதி தெரிவிப்பு

வவுனியா,ஏப்.20

இலங்கையில் தமிழ் மக்கள் பாதிக்கப்படும் போது அவர்களுக்காக இந்தியர்கள் குரல் கொடுத்தும் அது சில சமயங்களில் பயனற்றுப் போகின்றபோது கவலையளிக்கின்றது என இந்திய பாடகி சிறிநிதி தெரிவித்தார்.

வவுனியா வர்த்தகசங்கம் வறியமாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதி சேகரிப்புக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் ஒழுங்கமைத்துள்ள இசை நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வவுனியா வந்துள்ள நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :

இலங்கை கலைஞர்கள் கடின உழைப்பாளிகள், இந்தியாவை பொறுத்தவரை பாடகர்கள் உட்பட அனைத்து துறைகளுக்கும் வாய்ப்புக்கள் நிறைய உள்ளன. ஆனால் இலங்கையில் அது குறைவாகவுள்ளதுடன், இங்குள்ள கலைஞர்கள் தங்களை வெளிக்காட்டிக் கொள்வதற்கும், தங்களை நிலை நிறுத்திக்கொள்வதற்கும் சிரமப்படுகின்றனர். வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு நான் முன்பு வந்திருக்கிறேன், அப்பொழுது இங்குள்ள கலைஞர்களின் திறமைகளை பார்த்திருக்கிறேன். இங்கு சிறந்த கலைஞர்கள் மட்டுமன்றி சிறந்த விளையாட்டு வீரர்களும் உள்ளனர். இங்குள்ள கலைஞர்கள் மிகவும் திறமையாகச் செயற்படுகின்றார்கள்; எனவே இங்குள்ள ஊடகங்கள் அவர்களுக்கு வாய்ப்பை வழங்க வேண்டும். அனைவரும் அவர்களுக்காக கண்களை திறந்து பாருங்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையில் நிறைய தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுடன் கலைஞர்களும் மக்களுடன் மக்களாக இருந்திருக்கிறார்கள். அப்பொழுது இந்தியர்கள் இம்மக்களுக்காக குரல் கொடுத்திருந்தோம். இவர்களை காப்பாற்றுவதற்காகவும் இவர்களை தூக்கி விடுவதற்காகவும் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இருந்தும் அது சில சமயங்களில் பயனில்லாமல் பயனற்றதாகவே போயுள்ளன என நினைக்கும் போது மிகவும் கவலையாக உள்ளது என தெரிவித்தார். (க-110)

# டுபாயிலிருந்து மேலும் இருவர் நாடுகடத்தப்பட்டு விசாரணை

கொழும்பு, ஏப். 20

மாக்கந்துரே மதூஷுடன் டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் நாடுகடத்தப்பட்ட மேலும் இருவர் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடைந்தனர். பியல் புஷ்பகுமார மற்றும் மொஹமட் அப்ரிடி மொஹமட் இம்ரான் ஆகிய இருவருமே வருகை தந்தைவர்களாவர்.

இது சம்பந்தமாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளதாவது.

நாடுகடத்தப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான, மொஹமட் அப்ரிடி மொஹமட் இம்ரான் என்பவர் கஞ்சிப்பான இம்ரானின் மனைவியினுடைய சகோதரியின் புதல்வர். இவர்கள் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

2018ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி மாத்தறையில் 60 இலட்சம் ரூபா பெறுமதியான வான் கொள்ளை தொடர்பிலான சந்தேக நபர் இவர். இவர்களுக்கு முதல் நாடுகடத்தப்பட்ட மொஹமட் ரிஷான் மொஹமட் பதூர்தீன், மொஹமட் ஜபீர் மெஹமட் கிப்ரி, ரணசிங்க சுரேஸ் வசந்த, வேலுப்பிள்ளை ராகவன் சுரேஸ் வசந்த, ஜோன் மெரின் சீவன் ஹேவகே ஆகியோர் வானூர்தி நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் நிபந்தனையுடன் விடுவிக் கப்பட்டுள்ளனர். (த-71)

# சிவனொளிபாதமலைக்கு 2 இலட்சம் பக்தர்கள்

பொகவந்தலாவ, ஏப். 20

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டின்விடுமுறையை முன்னிட்டும் பௌர்ணமி தினத்தை முன்னிட்டும் சிவனொளி பாதமலையை தரிசிக்க சுமார் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

# அரச தலைவர் தேர்தலில்

# தமிழ் வேட்பாளர் களமிறங்குவது சிங்களப் பேரினவாதத்துக்கே வெற்றி

## எச்சரிக்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு, ஏப். 20

அரச தலைவர் தேர்தலில் தமிழ் வேட்பாளரை நிறுத்தி சிங்களத் தலைவர்களுக்கு தமிழ் மக்களின் வாக்குகள் செல்வதை தடுப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளால், சிங்கள பௌத்த பேரினவாதிகளின் சார்பில் நிறுத்தப்படும் ஒருவரே வெற்றிபெறுவார் என்று நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார். கொழும்பிலுள்ள நவசம சமாஜக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்களப் பேரினவாதத்தை மீண்டும் தூண்டிவிட்டு அதனூடாக வாக்குகளைப் பெற்று அரச தலைவராகலாம் என்ற கனவு தற்போது நிறைவேறாது என்ற நிலமை ஏற்பட்டிருக்கிறது. சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனையுடைய ஒருவரை அரச தலைவர் தேர்தலில் நிறுத்தினால் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கையில் மகிந்தவாதி உறுப்பினர்கள் உள்ளனர். அதனால் 'நூதன துட்டகைமுனு' ஒருவரை நிறுத்த திட்டமிட்டுள்ளனர். போரை முடித்தோம், நாட்டைப் பிரிக்கின்ற போராட்டத்தை அழித்தோம், அதனால் நாட்டைக் காப்பாற்றிய எங்களை வெற்றிபெறச் செய்யுங்கள் என்ற அடிப்படையில் வாக்குகளை கேட்கும் திட்டத்தில் அவர்கள் இருக்கின்றார்கள்.

அதற்காக யார் போட்டியிடுவது? மறுபக்கம் அரச தலைவர் சிறிசேன மீண்டும் போட்டியிட எதிர்பார்க்கின்றார். கூட்டணிப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் சிங்கள வாக்குகளைப் பெறும் ஒருவரை நிறுத்துவது பற்றி இன்னமும் முடிவெடுக்கவில்லை. ஆனால் சிங்கள பேரினவாதி ஒருவரை நிறுத்தினாலும் இன்று வெற்றிபெற முடியாத நிலை உருவாகியுள்ளது.

70 வீதம் சிங்கள மக்கள் உள்ளதோடு அதில் 5 வீதத்தினர் கிறிஸ்தவர்கள். 65 வீதமே துட்டகைமுனுவை அடிப்படையாகக் கொண்டு இனவாதத்தை தூண்டி ஏமாற்றக்கூடிய சிங்களவர்கள் இருக்கின்றனர். சிங்கள மக்களை மாத்திரம் நம்பி நிறுத்தப்படும் வேட்பாளர், தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளின்றி வெற்றிபெற வேண்டுமானால் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற வேண்டும். இது மிகவும் கடினமானதாக இருக்கும். கடந்தகால தேர்தல்களில் மகிந்த ராஜபக்ச தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளை இடைமறித்தே வெற்றி பெற்றார். இம்முறையும் மகிந்த, தமிழர் ஒருவரை அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தி தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கச் செய்து சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றியை சுவீகரிக்க முயற்சிக்கின்றார்.

இன்றும் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதக் கொள்கை கொண்ட சிலர், பிரிந்தே வாழ வேண்டும் என்ற சிந்தனையு டன் இருக்கின்றனர். அப்படியான ஒருவர்தான் எனது நண்பரான சிவாஜிலிங்கம். அவர் இதற்கு முன்னரும் மகிந்த ராஜபக்ச வெற்றி பெறுவதற்கு உதவியவர். தமிழ் மக்களின் வாக்குகளை திசை திருப்பி ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அதிகாரம் சென்றடையவதை தடுப்பதற்கு நினைக்கின்றார்.

அதற்காக வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனை தேர்தலில் நிறுத்தவுள்ளதாகவும் அறியமுடிகின்றது. இதனூடாக பன்னாட்டுச் சமூகத்தின் உதவியைப் பெறமுடியும் என்றும் எதிர்பார்க்கின்றனர். ஆனால் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடிப்பதற்காக இந்தியாவும் அமெரிக்காவுமே உதவியதை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

தமிழ் மக்களின் நீதிக்காக அவர்கள் ஜெனிவாவில் குரல் கொடுத்தாலும் அமெரிக்காவும், இந்தியாவும் விடுதலைப் புலிகளை தடைசெய்யப்பட்ட தீவிரவாத அமைப்புப் பட்டியலில் சேர்த்து அழிக்க வேண்டும் என்று செயற்பட்டவர்கள். இன்றும் அவர்கள் அதே நிலைப்பாட்டிலேயே உள்ளனர். விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டின் ஊடாக தமிழ் மக்களின் போராட்டத்தில் குறைந்த பட்சம் பிரிந்து செல்ல வேண்டும் என்று நினைத்தால் அது ஒருபோதும் சாத்தியப்படாத ஒன்றாகும்.

அதற்கு எதிராக செயற்பட்டவர்கள்தான் இந்தியாவும் அமெரிக்காவுமாகும். ஆகவே அப்படியான வேட்பாளர் ஒருவரை நிறுத்தி வாக்குகளை சிதறடிக்கச் செய்து முற்போக்கு வேட்பாளர் ஒருவரை தோற்கடிக்க முடியும் என்று நினைத்தால் அதுவும் சாத்தியப்படாது போலியான முயற்சியாகவே அமையும் - என்றார். (ஒ.5)

## ஊடக சுதந்திரத்தில் இலங்கை முன்னேற்றமாம்

கொழும்பு, ஏப். 20

2019ஆம் ஆண்டுக்கான உலகளாவிய ஊடக சுதந்திர சுட்டி வெளியிடப்பட்டுள்ளது. இதில் இலங்கை ஐந்து இடங்கள் முன்னேறியுள்ளது.

பரிஸை தலைமையிடமாகக் கொண்ட எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு வெளியிட்டுள்ள 180 நாடுகளை உள்ளடக்கிய இந்த ஆண்டுக்கான ஊடக சுதந்திர சுட்டியில், இலங்கை 126 ஆவது இடத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 131 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இந்த ஆண்டு ஐந்து இடங்கள் முன்னேறியிருக்கிறது.

ஊடக சுதந்திர சுட்டியில் இம்முறை நோர்வே முதலிடத்திலும், அதையடுத்து பின்லாந்து, சுவீடன், நெதர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளும் உள்ளன.

கடைசி 180 ஆவது இடத்தில் துர்க்மெனிஸ்தான் உள்ளது. அதனுடன் கடைசி இடங்களில் வடகொரியா, எரித்ரியா, சீனா, வியட்னாம் ஆகிய நாடுகள் உள்ளன. (ஒ.21)

### அரசியல்...

றது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககாரவின் பெயரில் அம்பாந்தோட்டையில் அமைக்கப்படவுள்ள கிராமத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் குமார் சங்ககாரவும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் சஜித், அரசியலையும், கிரிக்கெட்டையும் ஒப்பிட்டு உரையாற்றினார்.

கிரிக்கெட்டில் சங்ககார கையாளும் யுக்தியை, நுட்பத்தை அரசியல் களத்தில் நான் கையாண்டு வருகின்றேன். சில சமயங்களில் பந்து செல்ல இடமளித்து நேரம் தாழ்த்தி அதனையும் ஆடுவார். அவ்வாறிருக்கையில் இந்த ஆண்டு எனது அரசியல் பயணத்தில் தொடர்ச்சியாக ஆறு ஓட்டங்களை அடுத்தடுத்து அடிக்கவே எதிர்பார்த்திருக்கின்றேன் - என்றார். (ஒ.5,22,31)

### அரசியலுக்கு...

பிரவேசிக்கும் எண்ணம் தனக்கு இல்லை என்று குறிப்பிட்டார்.

'ஐக்கிய தேசிய முன்னணியின் பொது வேட்பாளராக தங்களின் (சங்ககாரா) பெயர் குறிப்பிடப்பட்டது. நீங்கள் அரசியலுக்கு வரமாட்டேன் என்று கூறியிருந்தீர்கள். இப்போது சஜித் பிரேமதாசவுடன் வந்திருக்கின்றீர்கள். அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் சஜித்துக்கும் கட்சிக்கும் கருத்து முரண்பாடு நிலவுகின்றது. இது தொடர்பில் என்ன கூறுகின்றீர்கள்?' என்று சங்காவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

'கட்சி முரண்பாடு தொடர்பில் நான் பதிலளிக்க விரும்பவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக களமிறங்க ரணில் பொருத்தமானவர். இதை நான் சொல்வதால் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளன் என்று நினைக்கவேண்டாம். நான் பொதுமகனாகவே கூறுகின்றேன்' என்றார். (ஒ.5,22)

### ஐ.தே...

தைப் போன்று ஒற்றுமையாக வாழ்கின்றோம். இதற்குள் கருத்து முரண்பாடுகள் சண்டைகள் வருவது வழமை. இதை நாமே பேசித் தீர்ப்போம். இதற்குள் வேறு எவரும் மூக்கை நுழைக்க முடியாது. '2018 அரசியல் சூழ்ச்சிக்காரர்கள்' எமது கட்சியை உடைக்க எடுக்கும் சதி முயற்சி ஒருபோதும் பலிக்காது. இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் உப தலைவர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கிடையில் சித்திரைப் புத்தாண்டு பிறந்தவுடன் கடும் சொற்போர் மூண்டது. இருவரும் பொது வெளியில் பகிரங்கமாகவே சரமாரியாக விமர்சனக்கணைகளைத் தொடுத்து வந்தனர். இதையடுத்து பொது வெளியில் கருத்து மோதலில் ஈடுபடுவதை உடன் நிறுத்துமாறு இருவருக்கும் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்தநிலையில், 'ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கட்சித் தாவல் தொடர்பில் ஒரு சூழ்ச்சி இடம் பெறுவதாக அறியமுடிகின்றது. அது அவர்களுக்குள் ஏற்பட்ட சூழ்ச்சி. எனினும் அது வெளியாகிய நிலையில் அந்த விடயம் கைவிடப்பட்டுள்ளது' என்று நுவரெலியாவில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தலைமை அமைச்சர் ரணிலிடம் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் சூழ்ச்சி ஊடாக ஆட்சியைப் பிடிக்க முயன்று மூக்குடைபட்டவர்கள் இப்போது எமது கட்சியை (ஐக்கிய தேசியக் கட்சி) உடைத்து ஆட்சியைப் பிடிக்க முயல்கிறார்கள். அவர்களின் பகல் கனவு ஒருபோதும் பலிக்காது. அவர்கள், சின்னாபின்னமாகியுள்ள தமது கட்சிகளை கட்டிக்காக்கும் வழியைப் பார்க்க வேண்டும். நாம் எந்தத் தேர்தலையும் ஓரணியில் நின்று சந்திக்கத் தயாராக இருக்கின்றோம். ஒவ்வொரு தேர்தல்களுக்கும் எமது வெற்றி வேட்பாளர்கள் தயார் நிலையில் உள்ளனர் - என்றார். (ஒ.5,22)

### வல்வையில்...

பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

'வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்ற ஆலயத் திருவிழாவின் போது இரு தரப்பினருக்கு இடையே மோதல் மூண்டது. எட்டு பேர் காயங்களுக்கு உள்ளாகினர்' என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றது என்று குறிப்பிட்டனர். (ஒ.5,26)'

### மாற்றுத்...

முன்னாள் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்களின் மாற்றுத் தலைமைக்குத் தகுதியானவரே அல்லர். இவ்வாறு இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு மாகாண சபை ஆட்சியில் இருந்த போது முதலமைச்சராக இருந்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்கு எதையும் செய்யவில்லை. கற்பனை அரசியல் செய்துகொண்டு தாம் மாற்றுத் தலைமை என்கின்றார். அதிகாரத்தில் இருக்கும் போது ஆக்கபூர்வமாக எதையும் செய்யவில்லை. கட்சியைத் தொடக்கி மக்களுக்கு என்னத்தைச் செய்யப்போகின்றார்?

புதிய கட்சி, கூட்டணி என்ற பெயரில் விக்னேஸ்வரன் அரசியல் இலாபம் காணுவாரே தவிர மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள், அதிகாரத்துக்குக் குரல்கொடுக்க வேண்டும். அதனையே மாற்றுத் தலைமையாக வர விரும்புபவர்கள் முன்னெடுக்க வேண்டும். முன்னாள் முதல்வர் விக்கியோ அல்லது அவருடன் கூட்டு வைத்திருப்பவர்களோ கற்பனையில் வாழ்பவர்கள், கற்பனை அரசியலே செய்து வருகின்றனர்.

இவர்கள் அரசுடன் மோதியோ பேச்சு நடத்தியோ எதையும் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியாது. அண்மையில்கூட இலங்கை அரசும் பாதுகாப்பு தரப்பும் இராணுவ முகாம்கள் உள்ள நிலங்களை விடுவிக்க முடியாது என இறுமாப்புடன் கூறி வருகின்றது. அப்போதுகூட தமிழ்த் தலைமைகள், கட்சிகள் மௌனம் சாதித்து வருகின்றன. வெறுமனே அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கின்றனர். இதனால் எதுவும் நடக்கப்போவதில்லை.

இலங்கை அரசு பகுதியளவில் காணிகளை விடுவித்தாலும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் மட்டுமே மக்களின் காணிகளை விடுவிக்கின்றது. எந்த அரசு வந்தாலும் மக்களின் காணிகளை விடுவிப்போம் என்று கூறியே ஆட்சிக்கு வருகின்றது. பின்னர் தமிழர்களை ஏமாற்றுபவர்களாகவே மாறுகின்றனர். இந்த நிலமையை யாராலும் மாற்ற முடியாது - என்றார். (த)

# பங்களாதேஷில் பயங்கரம் உயிரோடு எரிக்கப்பட்டார் மாணவி

டாக்கா,ஏப்.20

பங்களாதேஷில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரோடு எரித்துக்கொலை செய்யப்பட்டார். தலைமை ஆசிரியர் மீதான பாலியல் முறைப்பாட்டைத்திரும்பப் பெறுமாறு மிரட்டியே அவரைக் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.







பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில்இருந்து100கிலோ மீற்றர். தொலைவில் உள்ள நகரமான பெனியில் இந்தச் சம்பவம் நடந்தது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது: நஸ்ரத் ஜகான் ரபி (வயது 19) என்ற பெண் அந்தப் பகுதித் தனியார் பாடசாலையில் படித்து வந்தார். கடந்த மாத இறுதியில் பாடசாலைத் தலைமை ஆசிரியர் தன்னை அவரது அறைக்கு அழைத்துத் தவறான எண்ணத்தில் தொட்டுப் பாலியல் ரீதியில் துன்புறுத்தியதாக பொலிஸில் முறைப்பாடு அளித்தார்.

வழக்குப் பதிவு செய்து, தலைமை ஆசிரியரைக் கைது செய்தனர் பொலிஸார். அந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் சிலரும், சில அரசியல்வாதிகளும் இணைந்து, தலைமை ஆசிரியரை விடுதலை செய்ய வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நஸ்ரத் ஜகான் ரபி பொய் கூறியுள்ளதாகவும் குற்றம் சாட்டினர். இந்த நிலையில், பரீட்சை ஒன்றுக்காக நஸ்ரத் ஜகான் ரபி பாடசாலைக்குச் சென்றார். அப்போது, அவரைச் சூழ்ந்த ஐவர், தலைமை ஆசிரியர் மீதான முறைப்பாட்டைத் திரும்பப் பெறும்படி மிரட்டினர். அதை ஏற்க மறுத்ததால் அவர் மீது மண்ணெண்ணெயை ஊற்றித் தீவைத்தனர். இதில் அவர் சம்பவ இடத்திலேயே துடி துடித்துச் சாவடைந்தார். இந்த விவகாரம் பங்களாதேஷில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. நஸ்ரத் ஜகான் ரபிக்கு நீதி கிடைக்க வலியுறுத்திப் போராட்டங்கள் நடக்கின்றன.





அமெரிக்காவுக்குள் தஞ்சமடைகின்ற அகதிகள் எதிர்கொள்கின்ற அவலங்களை ஒளிப்படங்களாக்கினார் பன்னாட்டு ஊடகமான 'ரெய்டர்ஸ்'ஸின் செய்தியாளர் ஆல்கிஸ் கோன்ஸ்டாண்டினிடிஸ். அவருக்கு 'புலிட்ஸர்' விருது அறிவிக்கப்பட்டது. அவருடைய ஒளிப் படங்களில் சில.

# தேவாலயத்தில் தீ ஏற்பட மின் ஒழுக்கே காரணம்!

பரீஸ்.ஏப்.20.

பிரான்சின் பழைமையான தேவாலயமான நோட்ரே டேம் கதீட்ரலில் தீப்பிடித்தமைக்குக் காரணம் அங்கு ஏற்பட்ட மின் ஒழுக்கே என்று கண்டறியப்பட்டது. இது சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ளும் குழுவினரே இவ்வாறு தெரிவித்தனர். இந்தத் தீப்பிடிப்புக்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் அங்கு பொருத்தப்பட்ட மறைகாணிகளில்இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே இது கண்டறியப்பட்டது.

இந்தத் தீ ஏற்பட்டதற்கு வேறு காரணங்கள் ஏதும் இருந்தனவா என்ற கோணத்தில் விசாரணைகளைத் தொடர்கிறது அந்தக் குழு.



# போர்த்துக்கல்லில் பஸ் விபத்து சுற்றுலாப் பயணிகள் 29பேர் சாவு

லிஸ்பொன்.ஏப்.20

ஜேர்மனியைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற பேருந்து போர்த்துக்கல்லில் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 18 பெண்கள் உள்பட 29 பேர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர்.

போர்த்துக்கல்லின் வடகிழக்குப் பகுதியில் உள்ள தீவான மடெய்ராவின் தலைநகர் புஞ்சாலில் இருந்து, கடற்கரை நகரமான கனிகோவுக்குப் பயணித்த பேருந்தே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது.

கனிகோவில் உள்ள மலைப்பாங்கான பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, பேருந்து கட்டுப்பாட்டை இழந்து, வீதி ஓரத்தில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்தக் கோர விபத்தில் சாவடைந்தவர்கள் தவிர, 27 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.



# பாகிஸ்தானில் கவிழ்ந்தது பஸ்; 8 பேர் சாவு

இஸ்லாமாபாத்,ஏப்.20

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் பேருந்து ஒன்று கவிழ்ந்ததில் 8 பேர் சாவடைந்தனர். பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள இஸ்லாம்கோட் நகரில் இருந்து கராச்சி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பேருந்தே நேற்றுக் காலை இவ்வாறு விபத்துக்குள்ளானது.

படின் எனுமிடத்தில் பயணித்துக்கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்த குறித்த பேருந்து வீதி ஓரத்தில் கவிழ்ந்தது.

பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 50 பேர் இந்த விபத்தில் காயமடைந்தனர். அவர்கள் மருத்துமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.





# ஜப்பானுக்கு பயணிக்கிறார் ட்ரம்ப்!

வோஷிங்டன்,ஏப்.20

ஜப்பான் தலைமை அமைச்சர் ஷின்சேஅபேவைச்சந்திப்பதற்காக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அடுத்த வாரம் ஜப்பானுக்குப் பயணிக்க இருப்பதாக அமெரிக்க அதிபரின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகை தெரிவித்தது. எதிர்வரும் ஏப்ரல்26ஆம்திகதிஜப்பானில்பேச்சுகள்நடக்கவுள்ளன. இதில்வடகொரியாவுடனான உறவில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இரண்டு நாட்டுத் தலைவர்களும் ஆலோசிக்க உள்ளனர். மேலும் இரண்டு நாட்டு வர்த்தக உறவைப் பலப்படுத்துவதற்கானபேச்சுகளும் நடக்க உள்ளன என்று வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா முழுதும் நடந்த 2ஆம் கட்டத் தேர்தலில் 66 சதவீத வாக்குப்பதிவு



புதுடெல்லி,ஏப்.20

இந்தியாவின்நாடாளுமன்றத்தேர்தல் 543 இடங்களில் 7 கட்டங்களாக நடக்கிறது. கடந்த 11ஆம் திகதி நடந்த முதல் கட்டத்தேர்தலில்18 மாநிலங்களின் 91 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடந்தது. இதில்72சதவீதவாக்குகள்பதிவாகின. இரண்டாம் கட்டமாகத் தமிழகம் 38, புதுச்சேரி1, கர்நாடகா14, மகாராஷ்டிரா 10, உத்தரபிரதேசம்8, பிஹார், ஒடிசா, அசாமில் தலா 5, சத்தீஸ்கர், மேற்கு வங்கம் தலா 3, காஷ்மீர் 2, மணிப்பூரில் 1 என எல்லாமாக 95 தொகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் வாக்குப்பதிவு நடந்தது. மேற்குவங்கம், மணிப்பூரில் சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகின.

இதர மாநிலங்களில் வாக்குப்பதிவு அமைதியாக நடந்தது. குறித்த 95 தொகுதிகளிலும் வாக்குப் பதிவன்று மாலை6மணிவரையானநிலவரப்படி 66 சதவீத வாக்குகளே பதிவாகின. அனைத்து மாநிலங்களில் இருந்தும் முழுமையான தகவல் கிடைத்த பிறகு வாக்குப்பதிவு சதவீதம் அதிகரிக்கும் என்று தேர்தல் ஆணையகத்தின் மூத்த அதிகாரி உமேஷ் சின்ஹா தெரிவித்தார். எதிர்வரும் 23ஆம் திகதி 3ஆம் கட்டத் தேர்தல் குஜராத் 26, கேரளா 20, கர்நாடகா 14, மகாராஷ்டிரா 14, உ.பி.10, பிஹார், மேற்குவங்கம் 5 உட்பட 115 தொகுதிகளில் நடக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் 71சதவீத வாக்குப்பதிவு

சென்னை,ஏப்.20


இந்திய நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்கின்ற 2ஆவது கட்டத் தேர்தல் தமிழகத்தில் நேற்று முன்தினம் அமைதியாக நடந்தது. அதில் 70.90 சதவீத வாக்குகள் பதிவாகின. தமிழகத்தில்வேலூர்த்தொகுதியில் தேர்தல் நிறுத்தப்பட்டுள்ளது. அது தவிர்ந்த 38 தொகுதிகளிலுமே இந்த வாக்களிப்பு வீதம் பதிவாகியது.

நேற்று முன்தினம் இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒருமுறை வாக்குப்பதிவு நிலவரம் அறிவிக்கப்பட்டது.

இரவு 9 மணி நிலவரப்படி 38 தொகுதிகளிலும் 70.90 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன. புதுச்சேரியில் 81.57சதவீத வாக்குப் பதிவானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 'காவலாளி திருடன்' விளம்பரத்துக்குத்தடை

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கு எதிராகக் காங்கிரஸ் கட்சி வெளியிட்ட 'காவலாளி திருடன்' விளம்பரத்துக்கு மத்திய பிரதேச மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரிதடைவிதித்தார். அந்தவிளம்பரத்தை நிறுத்தவும் அவர் உத்தரவிட்டார். இது தொடர்பாக அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுக்கும் அவர் நேற்று அறிவித்தல் அனுப்பினார். இந்த விளம்பரம் அவதூறு மற்றும் குற்றத்தன்மையைக் கொண்டிருப்பதாகத் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் பா.ஜ.காவினர் முறைப்பாடுஅளித்ததையடுத்தேகாங்கிரஸ் கட்சிக்குக் குற்றப்பத்திரம்அனுப்பவும், எதிராக நடவடிக்கை எடுக்கவும் தலைமைத் தேர்தல் அதிகாரி உத்தரவிட்டார்.



## பாஜகாவுக்குத் தவறி வாக்களித்தவர் விரலை வெட்டியெறிந்தார்!

புலந்த்ஷெஹர்,ஏப்.20




உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த தலித் இளைஞர், தவறுதலாகப்பா.ஜ.காவுக்கு வாக்களித்துவிட்ட காரணத்தால் தனது விரலையை வெட்டிக்கொண்டார். இந்தச்சம்பவம்அங்கு அதிர்ச்சியைஏற்படுத்தியது. உத்தர பிரதேசத்தில் சமாஜ்வாதி பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் ராஷ்ட்ரிய லோக்தளம்ஆகியகட்சிகள் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றன. புலந்த்ஷெஹரில் இந்தக் கூட்டணி சார்பில் யோகேஷ் சர்மா என்ற வேட்பாளர் போட்டியிட்டார்.

புலந்த்ஷெஹரின் ஹலஸ்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர் பவன் குமார். 25 வயதான இவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் யோகேஷ் சர்மாவுக்கு வாக்களிக்க விரும்பினார். ஆனால் தவறுதலாகமின்னணுவாக்குப்பதிவுஇயந்திரத்தில்பா.ஜ.க. வேட்பாளர் போலா சிங்குக்கு வாக்களித்துவிட்டார்.

இதனால் மனமுடைந்த அவர், தனது விரலைத் துண்டித்தார். பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதுதொடர்பான காணொலி ஒன்றும் பரவி வருகிறது.

## வாக்களிப்பு இயந்திரங்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

சென்னை,ஏப்.20



தமிழகத்தில் வாக்குப்பதிவுகள் நேற்று முன்தினம் மாலை 6மணியுடன்முடிந்தநிலையில், வாக்கு எண்ணிக்கை மையங்களில்மின்னணுஇயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. தமிழகம் முழுவதும் 66ஆயிரத்து 699 வாக்குச்சாவடிகளில் நடந்த இந்த வாக்குப்பதிவுக்கான மின்னணு இயந்திரங்கள், வாக்குப் பதிவு முடிந்ததும், வேட்பாளர்கள், முகவர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு, அதற்கான பெட்டிகளில் வைக்கப்பட்டன.

அதன்பின், அந்தந்தத் தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை மையங்களில் கொண்டு சென்று வைக்கப்பட்டன. சென்னையில் அண்ணா பல்கலைக்கழகம் (தென்சென்னை), லயோலா கல்லூரி (மத்திய சென்னை), ராணி மேரி கல்லூரி (வடசென்னை, பெரம்பூர் சட்டப்பேரவை தொகுதி) உட்படத் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 39 வாக்குஎண்ணிக்கைமையங்களில் இந்த மின்னணு மற்றும்இயந்திரங்கள்பத்திரமாகப்பாதுகாக்கப்படுகின்றன. வாக்குஎண்ணும்மையங்களுக்கு3அடுக்குப்பாதுகாப்புவழங்குவதாகப்பொலிஸ்ஆணையாளர் ஏ.கே.விஸ்வநாதன் தெரிவித்தார்.

## இன்றைய நாள்

**மேடம்:** யாரிடமும் பொது விடயம் பேச வேண்டாம். உடல்நலனில் தகுந்த கவனம் கொள்வது நல்லது. தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். அதிக அளவில் பணம் செலவழிப்பதை தவிர்க்கவும்.

**இடபம்:** ஆர்வமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். வியத்தகு அளவில் நன்மை கிடைக்கும். தொழில் வளம் சிறந்து வாழ்க்கைத்தரம் உயரும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். வீடு, வாகனம் வாங்க வாய்ப்புண்டு.

**மிதுனம்:** பகைவரிடம் இருந்து விலகுவது நல்லது. முக்கிய பணி நிறைவேற மாற்று உபாயம் தேடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும்.

**கடகம்:** தாயின் அன்பும் ஆசியும் கிடைக்கும். தாமதமான செயல்கள் கூட எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரம் வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். அதிக பணவரவால் சந்தோஷம் கொள்வீர்கள்.

**சிம்மம்:** வெகுநாள் திட்டமிட்ட பணி நிறைவேறும். தொழில் வியாபாரம் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். தாராள அளவில் பணவரவு வந்து சேரும்.

**கன்னி:** செயல் நிறைவேற கூடுதல் அவகாசம் தேவைப்படும். தொழிலில் உள்ள அனுகூலத்தை தவறாமல் பாதுகாப்பது நல்லது. செலவில் சிக்கனம் பின்பற்றுவது சிரமத்தை தவிர்க்கும்.

**துலாம்:** நண்பரின் செயலை குறைசொல்ல வேண்டாம். அதிக உழைப்பால் தொழில் வியாபார நடைமுறையை சீர்படுத்துவீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். உணவுப்பொருள் தரமறிந்து உண்பது நல்லது.

**விருச்சிகம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். அதிக உழைப்பால் தொழில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். குடும்பத்தினரின் தேவையறிந்து தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** திகைப்பு தந்த பணி எளிதில் நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க அனுகூலமான சூழ்நிலை அமையும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மகரம்:** சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். எதிர்பாராத வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**கும்பம்:** முக்கிய செயல் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். தொழில் வியாபத்தில் உள்ள அனுகூலங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம்.

**மீனம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதலாக பணிபுரிவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணம் சேரும்.

## ஈருருளி ஓட்டம் இன்று

சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம் என்பவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் ஆண்களுக்கான 40 கிலோமீற்றர் ஈருருளி ஓட்டம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. ஈருருளி ஓட்டம் காலை 6 மணிக்கு ஆனைக்கோட்டை அரசடிச் சந்தியில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-23)

## இன்றைய ஆட்டங்கள்

வல்வெட்டித்துறை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் தொண்டமானாறு கலையரசி விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம், புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் அணிகள் மோதவுள்ளன.

இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் தொண்டைமனாறு கலையரசி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துப் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

விளையாட்டுக் கழகத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே இந்தத் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது. (எ-23)

# மரதன் ஓட்டப் போட்டியில் ஜெயந்தனுக்கு முதலிடம்


ஜெயந்தன்


பிரசாத்


லக்சன்

யாழ்ப்பாணம், ஏப்.20

வடக்கு மாகாண ரீதியில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான 10 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த கி.ஜெயந்தன் முதலிடத்தைப் பெற்றுள்ளார். அச்சுவேலியைச் சேர்ந்த த.பிரசாத் இரண்டாம் இடத்தையும், சுதுமலை வடக்கைச் சேர்ந்த ர.லக்சன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகம் என்பவற்றின் 50 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு இந்த மரதன் ஓட்டம் வடக்கு மாகாண ரீதியில் நேற்று நடத்தப்பட்டிருந்தது. (எ-23)



# மென்பந்து இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.20

மாதகல் விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்தும் வீரா மென்பந்து துடுப்பாட்ட இறுதிச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை 20ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

போட்டியின் ஆரம்பநிகழ்வு விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் உபதலைவர் ச.ஏகநாதன் தலைமையில் இடம்பெறும். முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் வி.சுப்பிரமணியம், மாதகல் கிழக்கு கிராம அதிகாரி ஜேம்ஸ் பொப்லர், மாதகல் நலன்விரும்பி திருமதி த.கிருஸ்ணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-50)

# கலையரசி, காமாட்சி அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.20

வல்வெட்டித்துறை தீருவில் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் தொண்டமானாறு கலையரசி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது. கலையரசி விளையாட்டுக் கழக அணியினர், மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியுடன் மோதினர். விறுவிறுப்பான நடந்த ஆட்டத்தில் 3:1 என்ற செற் கணக்கில் தொண்டமானாறு கலையரசி விளையாட்டுக் கழக அணியினர் வெற்றி பெற்றனர்.

மற்றொரு ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. இந்த ஆட்டம் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணிக்குக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சென்ரல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது. இரு அணிகளும் பலமாக மோதிக் கொண்டன. இறுதியில் 2:1 என்ற செற் கணக்கில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

விளையாட்டுக் கழகத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே இந்தத் தொடர் மின்னொளியில் நடத்தப்பட்டு வருகின்றது. (எ-23)

# கபடிப் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.20

வவுனியா மாவட்டத்தின் பிரதேச செயலகங்களுக்கு இடையே இரு பாலாருக்கும் இடையிலான கபடிப் போட்டிகள் நடைபெற்றவுள்ளன. இந்தப் போட்டிகள் இன்று வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-23)

# வடக்கின் நாயகன் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.20

வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணக் காலிறுதி ஆட்டங்கள் இன்று தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

முதலாவது காலிறுதி ஆட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகமும், புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இரண்டாவது காலிறுதி ஆட்டம் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும், இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டுவருகின்றது. தொடரின் ஆட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த நிலையில் தற்போது காலிறுதி ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. (எ-23)


நவிண்டில் கலைமதி வி.க.


சமரபாகு நியூட்டன் வி.க.

# யங்கென்றிஸ், சென்லூட்ஸ் இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப்.20

முருகுப்பிள்ளை விக்னேஸ்வரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்துத் தொடரின் இறுதியாட்டத்துக்கு இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணியும், இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியும் தகுதி பெற்றுள்ளன.

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் வலிகாமம் லீக்கின் ஆதரவுடன் முருகுப்பிள்ளை விக்னேஸ்வரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரை நடத்தி வருகின்றது. அணிக்கு 9 பேர் பங்குபற்றும் இந்தத் தொடர் மின்னொளில் நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடரின் அரையிறுதி ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் நடைபெற்றது. அதில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளான் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மாதகல் ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (எ-23)


# கலைமதி, நியூட்டன் அணிகள் இன்று இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்.20

வடமராட்சி லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த இறுதியாட்டம் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கல்விசார் புலமைப்பரிசில் நிதியத்துக்காக வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் ஒத்துழைப்புடன் இந்தத் தொடர் நடத்தப்படுகின்றது.


இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியும், சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக அணியும் களமிறங்கவுள்ளன. (எ-23)







## கிங்ஸ் லெவன் பஞ்சாப் பந்து வீச்சாளர்களுக்கு அஸ்வின் பாராட்டு



ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் அணிக்கெதிரான ஆட்டத்தில் சிறப்பாக பந்துவீசிய பந்துவீச்சாளர்களுக்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணித் தலைவர் ரவிச்சந்திரன் அஸ்வின் பாராட்டு தெரிவித்தார்.

மொஹாலியில் இடம்பெற்ற போட்டியில் பஞ்சாப் - ராஜஸ்தான் அணிகள் மோதின. இதில் பஞ்சாப் அணி 12 ஓட்டங்களால் வெற்றி பெற்று 4ஆவது இடத்துக்கு முன்னேறியது.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

போட்டியின் தொடக்கத்தில் சிறப்பாக வெற்றியைக் குவித்த எங்கள்அணி கடந்த சில ஆட்டங்களில் தடுமாறியது. ஆனால் ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பாக செயற்பட்டு வெற்றி பெற்றோம். தற்போது புள்ளிகள் பட்டியலில் 10 புள்ளிகளைப் பெற்று 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளோம்.

10 புள்ளிகள் பெறுவது மிக முக்கியமான ஒன்று. இந்த மைதானத்தில் 170 ஓட்டங்களுக்கு ராஜஸ்தானைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமான விடயம். இரண்டாவதாக துடுப்பெடுத்தாடுவதற்கு இந்த ஆடுகளம் எளிதாக இருக்கும். ஆனால் எங்கள் பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசி எதிரணி துடுப்பாட்ட வீரர்களைக் கட்டுப்படுத்தினர். அவர்களுக்கு எனது பாராட்டுகள்- என்றார்.

# டோனிக்குப் பக்கபலமாக எப்பொழுதும் இருப்பேன்

## கோக்லி தெரிவிப்பு

உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணித் தலைவராக விராட் கோக்லி அறிவிக்கப்பட்டார். எனினும் கோக்லி அணித் தலைவராக இருந்தாலும் அணியை வழிநடத்துபவர் டோனி தான் என்கிற விமர்சனம் எழுந்திருந்தது. டோனிக்கு பக்ககலமாக தான் செயற்படுவேன் என்று கோக்லி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:


போட்டியின் தன்மையை ஆடுகளத்தின் உள்ளேயும், வெளியேயும் கணிக்கக் கூடியவர் டோனி. முதல் பந்தில் இருந்து 300ஆவது பந்துவரை என்ன நடக்கும் என்பதை புரிந்து கொள்ளக் கூடியவர். ஸ்டம்புக்கு பின்னால் டோனி இருப்பது என்னுடைய அதிர்ஷ்டம்.

அவரை பலரும் விமர்சனம் செய்வது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. ஒவ்வொரு போட்டி முடிந்ததும் டோனி மற்றும் ரோகித் சர்மாவுடன் ஆலோசனை நடத்த விரும்புவேன்.

டெத் பந்துப்பரிமாற்றங்களில் எல்லை கோட்டில் இருந்து களத்தடுப்பில் ஈடுபட விரும்புவேன். அதன் மூலம் அணிக்குச் சிறப்பான பங்களிப்பை செலுத்த முடியும் என்று நம்புகிறேன். அந்த நேரத்தில் யாரேனும் ஒருவர் என்னுடைய பொறுப்பை மேற்கொள்ளவேண்டும்.

30-35 பந்துப்பரிமாற்றங்களுக்குப் பின்னர் நான் எல்லை கோட்டுக்கு அருகில் களத்தடுப்பில் ஈடுபட சென்று விடுவேன் என்று டோனிக்கு தெரியும். பின்னர் என்ன நடக்கும் என்பது எங்கள் இருவருக்கும் தெரியும். இருவருக்கும் இடையில் அதிக அளவில் நம்பிக்கையும், மரியாதையும் உள்ளது. ஆரம்ப கட்டத்தில் எனக்கு டோனியிடம் இருந்து நிறைய ஆதரவு இருந்தது. 3ஆவது வரிசையில் விளையாடும் வாய்ப்பு அளித்தவர். நிறைய வீரர்களுக்கு அந்த இடத்தில் வாய்ப்பு கொடுக்கப் படவில்லை.

இதை நான் எப்போதும் மறக்கமாட்டேன். டோனிக்கு எப்பொழுதும் நான் பக்கபலமாக செயற்படுவேன். விசுவாசமே எப்போதும் முக்கியத்துவம் பெறும் - என்றார்.



## போதுமான ஓட்டங்களை பெறவில்லை

## ரெய்னா தெரிவிப்பு

12ஆவது ஐ.பி.எல். தொடரில் சென்னை - ஹைதராபாத் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் ஹைதராபாத் அணி 6 இலக்குகளால் நடப்புச் சம்பியன் சென்னையை வீழ்த்தி வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் சென்னை அணித் தலைவர் டோனிக்கு ஓய்வளிக்கப்பட்டது குறிப்பிடத்தது. பதில் தலைவர் பொறுப்பை ரெய்னா செய்தார்.

தோல்வி குறித்து ரெய்னா தெரிவிக்கையில்;

இந்தத் தோல்வி, எங்களுக்கு நல்லதொரு எச்சரிக்கையாகும். நாங்கள் போதுமான அளவுக்கு ஓட்டங்களை எடுக்கவில்லை. பிளசிஸ், ஷேன் வட்சன் இணைப்பாட்டம் நன்றாக அமைத்து தந்தும் அதை பயன்படுத்திக் கொள்ளத்தவறிவிட்டோம். ஆரம்பஇணைபிரிந்ததும் அடுத்தடுத்து இலக்குகளை பறிகொடுத்தது பின்னடைவாகி விட்டது. பந்துகளை வீணடிக்காமல் ஒன்று, இரண்டு ஓட்டங்கள் வீதம் தொடர்ச்சியாக எடுத்திருக்க வேண்டும். எது எப்படியோ 30 ஓட்டங்கள் குறைவாக எடுத்து விட்டோம்.

முதுகில் ஏற்பட்ட பிடிப்பு காரணமாக டோனிக்கு இந்த ஆட்டத்தில் ஓய்வு அளிக்கப்பட்டது. தற்போது அவர் நன்றாக இருப்பதாக உணர்கிறார். அநேகமாக அடுத்த ஆட்டத்தில் அவர் விளையாடுவார் - என்றார்.



## உலகக் கிண்ணத் தொடர்:

# பாகிஸ்தான் அணி அறிவிப்பு



உலகக் கிண்ணத் தொடருக்கான பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அணித் தலைவராக சர்பிராஸ் அகமது தெரிவு செய்யப்பட்டுள்ளார். வேகப்பந்து வீச்சாளர் முகமது அமிர் நீக்கப்பட்டுள் ளார்.

மே மாதம் ஆரம்பமாகும் உலகக் கிண்ணத் தொடரில் 10 அணிகள் பங்குபற்றவுள்ளன. ஒவ்வொரு அணிகளும் தங்கள் பெயர் விவரங்களை அறிவித்து வரும் நிலையில் பாகிஸ்தான் அணி நேற்று தங்களுடைய அணியின் ப்யர் விவரங்களை வெளியிட்டனர்.

சம்பியன்ஸ் டிராபி இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக பந்து வீசிய வேகப்பந்து வீச்சாளர் முகமது அமிர் அதிரடியாக நீக்கப்பட்டுள் ளார். தென்னாபிரிக்கா தொடரின்போது விமர்சனத்துக்குள்ளாகி விளையாடாமல் இருந்த சர்பிராஸ் அகமது அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணி விவரம்:

சர்பிராஸ் அகமது(அணித் தலைவர்), பகர் சமான், இமாம்உல்ஹக், பாபர் ஆசம், சதாப் கான், சொய்ப் மலிக், பஹீம் அஷ்ரப், ஷஹீன் அப்ரிடி, ஹசன் அலி, அபித் அலி, முகமது ஹபீஸ், இமாத் வாசிம், ஜுனைத் கான், முகமது ஹசைனைன், ஹரிஸ் சோஹைற.

யூரோ சம்பியன்ஸ் லீக்:

# அஜக்ஸ் அணி அரையிறுதிக்கு



ஐரோப்பிய நாடுகளில் உள்ள முன்னணி கால்பந்து கழக அணிகளுக்கு இடையில் ஆண்டுதோறும் சம்பியன்ஸ் லீக் தொடர் இடம்பெற்று வருகின்றது.

இதில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் அஜக்ஸ் - யுவன்டாஸ் அணிகள் மோதிய போட்டியில் அஜக்ஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

அஜக்ஸ் - யுவன்டாஸ் அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் யுவன்டாஸ் அணி வீரர் ரொனால்டோ ஒரு கோலைப் போட்டார். பதிலுக்கு அஜக்ஸ் அணி வீரர் வான் டீ பீக் 34ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட முதல்பாதி ஆட்டம் 1:1 என்ற நிலையில் சமநிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்து 67ஆவது நிமிடத்தில் அஜக்ஸ் அணி வீரர் டீ லிக்ற் ஒரு கோலைப் போட ஆட்டம் விறுவிறுப்பானது. ஆட்டத்தின் இறுதி நிமிடம் வரையிலும் யுவன்டாஸ் அணி இன்னொரு கோல்களைப் பெறுவதற்கு முயற்சித்த போதிலும் அது கைகூடவில்லை. இறுதியில் அஜக்ஸ் அணி 2:1 என்ற கணக்கில் யுவன்டாஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது அஜக்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

உலகக் கிண்ணத் தொடரில்:

# இங்கிலாந்து அணிக்கு அதிக வெற்றி வாய்ப்பு

## ரவிசாஸ்திரி கணிப்பு

உலக கோப்பை போட்டிக்கான இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவு குறித்து தலைமை பயிற்சியாளர் ரவிசாஸ்திரி முதல்முறையாக மௌனம் கலைத்தார். இது குறித்து அவர் தெரிவிக்கையில்:

அணி தேர்வில் நான் ஒருபோதும் தலையிடுவது கிடையாது. அணி தெரிவு தொடர்பாக ஏதாவது ஆலோசனை இருந்தால் அணித் தலைவர் மூலம் தெரிவிப்பேன். உலகக் கிண்ணப் போட்டிக்கு 15 வீரர்களை மட்டும் தான் தேர்வு செய்ய முடியும் என்பதால் ஒரு சில வீரர்கள் தவிர்க்க முடியாமல் விடுபட்டு போவார்கள். இது முற்றிலும் எதிர்பாராததாகும். இந்தப் போட்டி நீண்ட காலம் கொண்டது என்பதால் 16 வீரர்கள் இருந்தால் நன்றாக இருக்கும் என்று நாங்கள் பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் தெரிவித்தோம். ஆனால் அவர்கள் 15 வீரர்களுக்கு தான் அனுமதி வழங்கியிருந்தது.

அணியில் இணைக்கப்படாத ஏனைய வீரர்கள் மன வேதனை அடையக்கூடாது. இது ஒரு வேடிக்கையான விளையாட்டாகும். வீரர்களுக்கு காயம் ஏற்பட்டால் வாய்ப்பை இழந்த வீரர்கள் எப்போது வேண்டுமானாலும் அணிக்கு அழைக்கப்படலாம்.

துடுப்பாட்ட வரிசையில் 4ஆவது வீரர் வரிசையில் எப்பொழுதும் குறிப்பிட்ட வீரரை மட்டுமே இறக்கிக் கொண்டிருக்க முடியாது. அது அவ்வப்போது மாறுதலுக்குரிய இடமாக இருக்கும். முதல் 3 வீரர்கள் வரிசையில் மாற்றம் செய்ய முடியாது. ஆடுகளத்தின் தன்மை, எதிரணி ஆகியவற்றை பொறுத்தே 4ஆவது வரிசை வீரர் முடிவு செய்யப்படுவார்.

கடந்த 5 ஆண்டுகளில் இந்திய அணியின் செயற்பாடுகளை பார்த்தால் எல்லா வடிவிலான ஆட்டத்திலும் இந்திய அணி முதல் மூன்று இடத்துக்குளேயே இருக்கிறது. இதன் மூலம் இந்திய அணி கோக்லியை நம்பி இல்லை. இப்படி நிலையான வெற்றிகளை அணி பெறுவதற்கு பல வீரர்க்ள் எல்லா நேரங்களிலும் சீராக விளையாட வேண்டியது அவசியமானதாகும். நிலையான வெற்றியின் ஒட்டுமொத்த பெருமையும் அணியைத்தான் சாரும்.

கடந்த 2 ஆண்டுகளாக ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. அந்த அணியில் பன்முகத்தன்மை கொண்ட வீரர்கள் உள்ளனர். அவர்கள் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் வலுவாக இருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் சொந்த மண்ணில் விளையாடுகிறார்கள். அதனால் இப்போதைக்கு உலகக் கிண்ணத்தை வெல்ல அதிக வாய்ப்புள்ள அணியாக விளங்குகிறார்கள். ஆனால் குறிப்பிட்ட நாளில் எந்த அணியையும், எந்த அணியாலும் வீழ்த்த முடியும். உலகக் கிண்ணம் போன்ற பெரிய போட்டியில் ஒவ்வொரு ஆட்டத்திலும் உச்சபட்ச திறனை வெளிப்படுத்த வேண்டும் - என்றார்.

**மாடி வீடு விற்பனைக்கு**

யாழ். நகரின் மத்தியில் ரம்மியமான சூழலில் 3 1/2 பரப்பு விஸ்தீரணமும் 8500 சதுர அடியிலும் அமைந்த மாடி வீடு விற்பனைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள், தனியார் வைத்தியசாலை மற்றும் விருந்தினர் விடுதிகள் அமைக்கக் கூடிய வகையில் 15 இற்கு மேற்பட்ட அறைகள், முகப்பு பூந்தோட்டம், 100 பேர் வரை உள்ளடக்கக்கூடிய மண்டபம் மற்றும் வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடியதாக இவ் வீடு அமைந்துள்ளது.

தொடர்பு - 0777 830 562

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள வீட்டில் தங்கிநின்று சிறிய குழந்தையை பராமரிப்பதற்கு 30 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட பணிப்பெண் தேவை.

தொடர்பு - 075 255 4824




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.